விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25

ஒலி 041 வள்ளுவர் ஆண்டு 2055 தை 15 திங்கட்கிழமை (29.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829






## சர்வதேச அழுத்தம் இருந்தாலும் 'யுக்திய' நடவடிக்கை தொடரும்

### அமைச்சர் டிரான் அலஸ் உறுதி



(கொழும்பு)

"யுக்திய" நடவடிக்கைக்கு சர்வதேச அழுத்தங்கள் இருந்த போதிலும், அது தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப் படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் 16

## தமிழரசுக் கட்சி செயலாளர் பதவி நேற்றைய சந்திப்பிலும் முடிவில்லை

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுக்குழுக்கூட்டத்தில் கட்சி நிர்வாகிகள் தெரிவு தொடர்பாக அறிவிக்கப்பட்ட முடிவுகளை அப்படியே கிடப்பில் பேணவும், இறுதித் தீர்மானங்களை எடுப்பதைத் தள்ளிப் போடவும் நேற்று மதியம் மாவை சேனாதிராஜாவின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டதாக கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரன் எம்.பி 15

## நிகழ்நிலைச் சட்டமூலத்தில்

# நீதிமன்றப் பரிந்துரைகள்

# நிச்சயம் உள்வீர்க்கப்படும்



(கொழும்பு)

நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்துக்கு உயர் நீதிமன்றம் வழங்கியிருக்கும் திருத்தங்கள் உள்வாங்கப்படும். அத்துடன் உலக நாடுகளில் இருக்கும் சட்டத்தைவிட மிகவும் தளர்வான சட்ட திட்டங்களே குறித்த சட்டமூலத்தில் உள்வாங்கப்பட்டிருக்கின்றன என ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் அடுத்த ஜனாதிபதி அநுரவே

### உறுதிபடக்கூறுகிறது ஜே.வி.பி



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அநுர குமார திஸாநாயக்க வெற்றியீட்டுவார் என்பது நூறு வீதம் உறுதியாகியுள்ளதாக ஜே.வி. பியின் முன்னாள் 15

## இந்திய - இலங்கை கப்பல் சேவை அடுத்த மாதம்



6ஆம் பக்கம் பார்க்க

## கடற்கொள்ளையர்களால் மீனவர்கள் கடத்தல்

### கூட்டுக் கடற்படையிடம் உதவி கோரிய இலங்கை அரசு

(கொழும்பு)

இலங்கையின் பலநாள் மீன்பிடிப் படகொன்று சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டமை தொடர்பில் விசாரிக்குமாறு 15

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

(கரணவாய்)

சங்கரன்கட்டை கரணவாய் தெற்கு, கரவெட்டி பகுதியிலுள்ள கிணறொன்றிலிருந்து பெண்ணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

கிணற்றில் சடலம் காணப்படுவதனை 16

## இலங்கை கிரிக்கெட்டின் தடை நீக்கப்படும்



(கொழும்பு)

இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குவதற்கு சர்வதேச கிரிக்கெட் பேரவை தீர்மானித் 15






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்றி காக்கும் உங்கள் நாளிதழ்

காரைநகர்

## கிழவன்காடு கலாமன்றம்

நடாத்தும்

சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின்

177 ஆவது இசை ஆராதனை விழா அழைப்பு

**இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.**

**காலம் : 30.01.2024 செவ்வாய்க்கிழமை பி.ப 4.00 மணி**

**நிகழ்ச்சிகள்**

- தொடக்கவுரை - **முதுத்தத்துவமாணி நவரத்தினம் பரந்தாமன்** அவர்கள் (முதுநிலை விரிவுரையாளர், இசைத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)
- ஈழத்து பிரபல நாதஸ்வர, தவில் கலைஞர்கள் இணைந்து வழங்கும் **'மங்கள இசை'**
- ஈழத்து பிரபல கர்நாடக இசைக் கலைஞர்கள் மற்றும் வாத்தியக் கலைஞர்கள் இணைந்து வழங்கும் **'இசை ஆராதனை'**



குறிப்பு - நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ் கிளையிலிருந்து பி.ப 3.30 மணிக்கு ஆரம்பமாகும். (இல 428 கே.கே.எஸ் வீதி வண்ணை சிவன் கோவில் அருகாமை)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

கிழவன்காடு கலாமன்றம்

(C-8226) காரைநகர் – யாழ்கிளை

# நல்லூர் எஜமானின் தாயார் காலமானார்



12 மணிக்கு நல்லூர் மாப்பாணர் வளவு இல்லத்தில் நடைபெறும். (ந-7.33)

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் எஜமான் குமரேஷ் சயந்தன குமார தாஸ் மாப்பாண முதலியாரின் தாயார் திருமதி சுகிர்தாதேவி குமாரதாஸ் மாப்பாண முதலியார் நேற்று குகபத மடைந்தார்.

நல்லூர் முருகன் ஆலய பத்தா வது எஜமான் குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாணரின் மனைவியாகிய இவர், நல்லூர் முருகன் ஆலயப் பணிகளுக்குப் பெருந்துணையாக இருந்து நல்லூர் ஆலயத்தின் சிறப்புக்கு அரும்பணியாற்றிய வர்.

இவரின் இறுதிக் கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை பகல்

# இராணுவ சீருடை அணிந்தால் 50 ஆயிரம் இடையூறு விளைவித்தால் 25 ஆயிரம்

## எகிறுகிறது தண்டப்பணம்

(கொழும்பு)

முப்படையினரின் சீருடைகள் போன்ற ஆடைகளை அணிந்தாலோ அல்லது அடையாளத்தினை பயன் படுத்தினாலோ விதிக்கப்படும் தண் டப்பணம் 50 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல் கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீர மைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக் ஷவினால் முன்வைக் கப்பட்ட குற்றவியல் சட்ட மூலத்தில் மேற்கொள் எப்பட்ட திருத்தத்திற்கு அமைய இந்த நடவ டிக்கை முன்னெடுக்கப் பட்டுள்ளது.

அத்துடன், கலவரம் தொடர்பில் நில உரி மையாளர்கள் அல்லது ஆக்கிரமிப்பாளர்கள் தகவல் வழங்கு வதற்கு தவறும் நிலையில் 1000 ரூபா யாகக் காணப்பட்ட அபராதத்தொகை 10 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கலகம் விளைவிப்போருக்கு எதிராக விதிக்கப்பட்ட 100 ரூபாய் அபராதம் 10 ஆயிரம் ரூபாய் வரை அதிகரிக்கப்பட் டுள்ளது.

மேலும், பொது மக்களுக்கு இடையூறு விளைவிப்போருக்கு விதிக்கப்படும் அபரா தம் 50 ரூபாயில் இருந்து 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## துஷ்பிரயோகம் தொடர்பில் உடன் அறிவிக்க தொலைபேசி இல. அறிமுகம்

(கொழும்பு)

நீதி நடவடிக்கைக்கு சமாந்தரமாக இலங்கையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்கும் விசேட வேலைத்திட்டம் ஒன்று அமுல்ப் படுத்தப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

109என்ற எண்ணுக்கு அழைப்பை ஏற்படுத்தி முறைப்பாடுகளை செய்யு மாறும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

முறைப்பாட்டுக்கு 48 மணித்தியாலங் களில் தீர்வுகாண உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார். (ந-7)

லங்கா மஹால்(PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை



லண்டன் - 925/=
பிரான்ஸ் - 1790/=
ஜேர்மனி - 1700/=
கனடா - 2150/=
அவுஸ்திரேலியா - 2450/=
சுவிஸ் - 2050/=
இந்தியா - 990/=

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை. (18813)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
0091956156719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

40,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
077 8393 974

# இதய அஞ்சலி



எமது பல்கலைக்கழக கலைப் பிரிவு(புவியியல்) நண்பி
**திருமதி சுதாயினி கோணேஸ்வரன்**(Switzerland)
அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் திருமதி கணபதிப்பிள்ளை சரஸ்வதியம்மா**


அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவுத்துயரில் பங்கு கொள்ளும்
**யாழ்.பல்கலைக்கழக 95/96 நண்பர்கள்**

(C-8232)

# மரண அறிவித்தல்

## நாகமுத்து சித்திவினாயகம்



பருத்தித்துறை அல்வாய் வடக்கு குரும்பிலாவத்தையைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து சித்திவினாயகம் அவர்கள் நேற்று முன்தினம் (27.01.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராணி அவர்களின் அன்புக் கணவரும் வசீகரன் (சுவிஸ்), வைதேகி, அகிலன், தேனுகா, இராஜகிருஸ்ணன் (இலண்டன்), மதுசூதனன் (இலண்டன்), ராதிகா சுமரதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அ.அகிலன் (சமுர்த்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - பருத்தித்துறை), க.சுமரதன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச சபை, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை), ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.01.2024) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-8231)

# என்றும் மறவோம்

## திருமதி புஷ்பராணி கணேசானந்தன்



தோற்றம் : 26.10.1943
மறைவு : 25.01.2024

அன்னார் வெலிமடை நாதன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் மூளாய் நாகலிங்கம் - மீனாட்சி தம்பதிகளின் மகளும், பண்டாரவளை வல்லிபுரம் அன் சன்ஸ் உரிமையாளர் வல்லிபுரம் நாகம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ் சென்ற கணேசானந்தனின் அன்புமனைவியும், பிரபு, நிருபா ஆகியோரின் அருமைத் தாயாரும், Stephanie, சுமன் ஆகியோரின் மாமியும், Nyssa, Sayan, Caleb ஆகியோரின் பாட்டியும், மறைந்த தனலட்சுமி (மணி) குணரத்தினம், பராசக்தி கிருஷ்ணன், குகமணி காராளசிங்கம் மற்றும் கமலாதேவி விவேகானந்தராசா, பத்மநாதன் ஆகி யோரின் சகோதரியும், மறைந்த மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் மற்றும் ஞானாம்பிகை திகம்பரலிங்கம், கிருஷ்ணவேணி தங்கராசா, கோபாலச் சந்திரன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல குரும்பசிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (29.01.2024) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

(C-8235)

தங்க.முகுந்தன் (மருமகன்) குடும்பம் - மூளாய் - 077 727 9238

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பண்டிகைக் காலத்தில் அத்தியாவசிய பொருட்களின் விலை மீண்டும் அதிகரிக்க வாய்ப்பு

## கடும் நெருக்கடிக்குள் மக்கள்

**(கொழும்பு)**

**கடந்த ஆண்டை விட இந்த வருடத்தின் அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மீண்டும் அதிகரிக்கலாம் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.**

உள்நாட்டு உற்பத்திகளை அதிகரித்து நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் திட்டம் அரசாங்கத்திடம் இல்லாததால் தமிழ் - சிங்கள புத்தாண்டு காலத்திலும் பொதுமக்கள் அதிக விலைக்கு பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் எதிர்பார்க்கும் வருவாய் இலக்குகளின்படி ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வரிக் கொள்கையினால் இது வரையில் ஒருவர் ஒரு மாதத்தில் செலுத்திய மறைமுக வரியான 6330.00 ரூபாய், 3684 ரூபாயிலிருந்து 10,014 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இதன்படி நாட்டில் வசிக்கும் ஒருவர் மாதாந்தம் 14,737 ரூபா மறைமுக வரி செலுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சர்வதேச நாணய நிதிய த்தின் ஒப்பந்த விடயங்களின் அடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வரிகளை அரசாங்கம் மேலும் அதிகரிக்க வேண்டியிருக்கும் எனவும் இதன் காரணமாக எதிர்காலத்தில் மக்கள் தமது வாழ்க்கைச் செலவுகளை ஈடு செய்வதில் கடும் நெருக்கடி உள்ளாகலாம் எனவும் பேராசிரியர் தெரிவித்துள்ளார். (நி)

## லொறி-மோ.சைக்கிள் மோதி விபத்து

### சிறுவன் உயிரிழப்பு

(கொழும்பு)

தம்பாளையில் இடம்பெற்ற விபத்தில் சிறுவன் ஒருவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தம்பாளை - றிபாய் புரயில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

குறித்த வீதியால் சிறுவன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது லொறியுடன் மோதி விபத்து நேர்ந்துள்ளது.

சம்பவத்தில் தம்பாளை வேப்பம்புரயில் வசித்து வந்த 17 வயதுடைய சிறுவனே உயிரிழந்துள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய லொறி சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# அரச சேவையை மேலும் விரிவுபடுத்த முடியாது

### அமைச்சர் வெளியிட்ட அதிர்ச்சி அறிவிப்பு



(கொழும்பு)

அரச சேவையை மேலும் விரிவுபடுத்த முடியாது என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

சனத்தொகை விகிதாசாரத்தில் உலகிலேயே அதிகளவான அரச ஊழியர்களைக் கொண்ட நாடாக இலங்கை விளங்குவதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை முழு அரச சேவையிலும் பாதி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அமைச்சரவையின் அனுமதியை கோரியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட இலங்கை மீனவர்கள்

(கொழும்பு)

இலங்கை மீனவர்கள் சிலர் சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

சீஷெல்ஸ் நாட்டை அண்மித்த வடக்கு கடற்பரப்பில், இந்த கடத்தல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் இலங்கை மீனவர்கள் 6 பேரை ஏற்றிச்சென்ற நீண்டநாள் மீன்பிடி படகொன்றே சோமாலிய கடற்கொள்ளையர்களால் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கடத்தப்பட்டுள்ள குறித்த படகு, அண்மையில் திக்கோவிட்ட துறைமுகத்தில் இருந்து கடற்றொழிலுக்காக சென்றதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கயான் விக்ரமசூரிய குறிப்பிட்டுள்ளார். (நி)

# வாடகைக்கு கட்டடங்களை வழங்கும் போது அவதானத்துடன் செயற்படுங்கள்

## பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

வீடுகள் மற்றும் கட்டடங்களை வாடகை அடிப்படையில் வழங்கும் போது எச்சரிக்கையுடன் செயற்படுமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.



போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் அதிக விலை கொடுத்து வீடுகள் மற்றும் கட்டடங்களை வாடகை அடிப்படையில், பெற்றுக் கொண்டுள்ளமை யுக்திய போதைப் பொருள் விசேட சோதனை நடவடிக்கையின் போது தெரிய வந்துள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக, வீடுகள் மற்றும் கட்டடங்களை வாடகை அடிப்படையில் வழங்கும் போது, அவதானத்துடன் செயற்படுமாறு அவர் வலியுறுத்தியுள்ளார். (நி)

# சடுதியாக அதிகரிக்கும் தொழுநோயாளர்கள்



(கொழும்பு)

இலங்கையில் தொழுநோயின் தாக்கம் அதிகரித்துள்ளதுடன் தற்போது அதிகளவான மக்கள் மத்தியில் தொழுநோய் பாரிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமை உலக தொழுநோய் தினமாக அனுசரிக்கப்படுகின்றது.

மேலும் தொழுநோயை தோற்கடிப்போம் என்ற தொனிப்பொருளில் இந்த வருடம் தொழுநோயாளர் தினம் அனுசரிக்கப்படுகின்றது. இதேவேளை, இலங்கையில் கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் தொழுநோயாளிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தொழுநோய் கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் பிரசாத் ரணவீர தெரிவித்தார். மேலும், சிறுவர்களிடையே பரவும் தொழுநோயைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி)

# நிகழ்நிலை காப்பு சட்டம்

## பொருளாதார மீட்சிக்கு தீங்கு விளைவிக்கும்

## கனடா கவலை

(கொழும்பு)

இலங்கையின் நிகழ்நிலை காப்பு சட்டம் பொருளாதார மீட்சிக்கு தீங்கு விளைவிக்கும் என கனடா கவலை வெளியிட்டுள்ளது.

இலங்கை மற்றும் மாலை தீவுக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக்வோல்ஸ் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் இதனை தெரிவித்துள்ளார்.

அவரது டுவிட்டர் பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் நிகழ்நிலை காப்பு சட்டம் பொருளாதார மீட்சிக்கு தீங்கு விளைவிக்கும் மற்றும் ஜனநாயக சமூகத்தில் எதிர்பார்க்கப்படும் நியாயமான உரையாடலைக் கட்டுப்படுத்தும் சாத்தியம் உள்ளது என்ற கவலையை நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம்.

இதைத் தவிர்க்க, நிகழ்நிலையில் தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கத்தை எதிர்கொள்ள எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையும் கருத்துச் சுதந்திரம் உட்பட அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் பதிவிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## 'யாழின் நாயகன்' உதைபந்தாட்ட தொடர்

## துணவி சென். நியூஸ்ரார், காரைநகர் சப்பைக்கட்டு அணிகள் அடுத்த சுற்றுக்கு தகுதி





'யாழின் நாயகன்' உதைபந்தாட்ட தொடரில் துணவி சென்நியூஸ்ரார் மற்றும் காரைநகர் சப்பைக்கட்டு அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட யாழின் நாயகன் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் துணவி செனியூஸ்ரார் அணியை எதிர்த்து உரும்பிராய் உதயசூரியன் அணி மோதியது. இதில் துணவி சென்நியூஸ்ரார் அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

அடுத்து நடைபெற்ற ஆட்டத்தில் காரைநகர் தோப்புக்காடு அணியை எதிர்த்து யூனியன்ஸ் அணி மோதியது. அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய காரைநகர் தோப்புக்காடு அணி 9:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினர். (நி-90)

## அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ்; மீண்டும் சம்பியனான அரினா சபலென்கா

அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் அரினா சபலென்கா மீண்டும் சம்பியனாகியுள்ளார்.



2024 அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் மகளிர் ஒற்றையர் இறுதிப் போட்டி மெல்பேர்னில் நேற்று முன்தினம் நடை பெற்றது. இப்போட்டியில் சீனாவின் ஸெங்கின் வென்னை 6-3,6-2 விகிதத்தில் சபலென்கா வென்றார்.


25 வயதான அரினா சபலென்கா கைப்பற்றிய இரண்டாவது ஒற்றையர் கிராண்ட்ஸ்லாம் பட்டம் இது. கடந்த வருடமும் அவுஸ்திரேலிய பகிரங்க மகளிர் ஒற்றையர் பட்டத்தை அவர் வென்றிருந்தார்.

உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு காரணமாக, ரஷ்ய மற்றும் பெலாரஸ் போட்டியாளர்கள் அந்நாடுகளின் சார்பில் இப்போட்டியில் பங்குபற்ற தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால், நடுநிலை நாட்டவராகவே அரினா சபலென்கா இச் சுற்றுப் போட்டியில் பங்கு பற்றினார்.

உலகின் முன்னாள் முதல்நிலை வீராங்கனையான அவர், மகளிர் இரட்டையர் பிரிவில் 2019ஆம் ஆண்டில் அமெரிக்க பகிரங்க சுற்றுப்போட்டியிலும், 2021ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய பகிரங்க சுற்றுப்போட்டியிலும் சம்பியனாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அவுஸ்திரேலியாவை 8 ஓட்டங்களால் தோற்கடித்தது மேற்கிந்திய அணி

அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்திய அணி 8 விக்கெட்களால் வெற்றி பெற்றுள்ளது.



வெற்றிபெறுவதற்கு 215 ஓட்டங்களை பெறவேண்டிய நிலையில் தனது இரண்டாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 207 ஓட்டங்களிற்கு தனது அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

மேற்கிந்திய அணியின் சார்பில் தனது இரண்டாவது டெஸ்ட் போட்டியை விளையாடிய இளம் வேகப் பந்து வீச்சாளர் சமார் ஜோசப் 7 விக்கெட்களை வீழ்த்தினார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் கொடுப்பனவு பெப்ரவரி முதல் அதிகரிப்பு

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் கொடுப்பனவை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் 1,000 ரூபாவினால் அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

மாணவ, மாணவிகளின் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

பொருளாதாரச் சிரமங்கள் உள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் வழிகாட்டலின் கீழ் ஜனாதிபதி நிதியம் இந்த புலமைப்பரிசில் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது.

இதன்படி, புலமைப்பரிசில் தொகை அதிகரிப்புடன், எதிர்வரும் பெப்ரவரி முதல் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரை ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் ஜனாதிபதி நிதியிலிருந்து 6,000 ரூபாய் மாதாந்த உதவித்தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# அதிவேக நெடுஞ்சாலை விபத்துகளில் இதுவரை 79 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

அதிவேக நெடுஞ்சாலை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இதுவரை இடம்பெற்ற விபத்துகளில் 79 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன.

நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து 2011 இல் தொடங்கியதுடன் ஆரம்ப ஆண்டில் எந்த விபத்துகளும் பதிவாகவில்லை.


கடந்த ஆண்டு மட்டும் அதிவேக நெடுஞ்சாலை விபத்துகளில் 4 பேரும் இந்த ஆண்டு கடந்த 26 நாட்களில் 4 பேரும் உயிரிழந்துள்ளனர்.

2011ஆம் ஆண்டுக்குப் பிறகு 2022 ஆம் ஆண்டுதான் அதிக வீதி விபத்துகளால் உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளன. தொடங்கப்பட்டதில் இருந்து இதுவரை 88 பேர் அதிவேக நெடுஞ்சாலையில் நடக்கும் விபத்துகளில் பலத்த காயம் அடைந்துள்ளனர்.

குறித்த வீதி உரிய தரத்திற்கு அமைய நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் சாரதிகள் கவனமாக வாகனத்தை செலுத்தினால் வீதி விபத்துகளை தவிர்க்க முடியும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவா தெரிவித்தார். (ந)

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 – 05 – 1943



மறைவு 27 – 01 – 2024

## அமரர்.சின்னக்குட்டி அருச்சுனன்

கல்லூரி வீதி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி அருச்சுனன் அவர்கள் 27.01.2024 சனிக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி ஆச்சிப்பிள்ளையின் அன்பு மகனும் அருமை நாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்வரத்தினம், காலஞ்சென்ற இலட்சுமணன், தர்மலிங்கம், காலஞ்சென்ற சண்முகேஸ்வரி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவாஜினி, ஸ்ரீரமேஸ்வரன், ஸ்ரீரமணன், ஜீவனா, மயூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், இந்திரன், ஸ்ரீரஞ்சினி, நந்தினி அருந்தவநாதன், டினேசிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நிவேதா, நர்த்தனன், வருண், சகானா, சாகித்தியன், நர்மிதா, மதுமிதா, சாருஜன், அர்ச்சனா, அர்ச்சதன், அபிமன்யு, கர்ச்சிதா ஆகியோரின் பேரனும் சன்விகன், சஞ்சனா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.01.2024 இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று மட்டிவளை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கல்லூரி வீதி,
இளவாலை.

077 707 8846 (சி -8229)

தகவல்,
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் திரு.செல்வரத்தினம் குமரேசன் அவர்களின் பாசமிகு தந்தை

அமரர்.

**மாணிக்கம் செல்வரத்தினம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள்
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

(18807)

# இராசிபலன்

29.01.2024
தை 15, திங்கட்கிழமை
சதுர்த்தி முழுவதும்

பூரம் முன்னிரவு 6.19 மணிவரை
சுபநேரம் -12.36-2.06 மணிவரை
இராகுகாலம்-8.06-9.36 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்
உத்தராடம், திருவோணம்

வளவன்




வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வழிபாடு ஆனந்தம் தரும், தாழ்ந்த சுபாவமுண்டு.




தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும்.




திடீர் பணவரவால் மகிழ்ச்சியடைவீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.




உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டல் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழிலில் கவனத்தடன் நடந்து கொள்வது நல்லது.




தனவரவில் இருந்த தடைகள் அகலும், வழிபாடு முன்னேற்றம் தரும், சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும்.




வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், மனக் குழப்பங்கள் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணை புரிவர், திடீர் பயணங்கள் ஏற்படலாம்.




உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும் நாள்.




புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.




வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொது நல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள்.




அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.




மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதி தரும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், எதிர்ப்பாக இருந்தாவர்கள் மனம் மாறுவர்.




அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், உங்கள் திறமைகள் வெளிப்படும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, கௌரவமான நாள்.

எதிரிகளை ஒழிக்க அவர்களையே நண்பர்களாக்குங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய தொண்டர் சபைக்கு நாகபூஷணி ஆலயத்தினரால் மதிப்பளிப்பு



(சாவகச்சேரி)

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் மகாகும்பாபிஷேக பெரு விழாவில் பாதுகாப்பு,ஒழுங்கமைப்பு உள்ளிட்ட தொண்டுகளை ஆற்றிய இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமய தொண்டர் சபையின் தொண்டர்களுக்கு ஆலய நிர்வாகத்தினரால் அவர்களுடைய சமயப்பணிக்கு மதிப்பளித்து சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை முதலுதவிச்சங்க இந்து சமய தொண்டர் சபையின் தேசிய ஆணையாளர் வை.மோகனதாஸ் தலைமையிலான தொண்டர்கள் கடந்த 21ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரை நயினை நாகபூஷணி ஆலயத்தில் தொண்டாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(நி-30)

# இந்திய-இலங்கை படகு சேவை அடுத்த மாதம் முதல் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

இந்தியா - இலங்கை இடையிலான பயணிகள் படகு சேவையை எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு இந்திய அரசின் அனுமதி கிடைத்துள்ளதாக துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ்.காங்சேன்துறையிலிருந்து தமிழகத்தின் நாகப்பட்டிணம் வரை இந்த படகு சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

இலங்கை - இந்தியா இடையிலான பயணிகள் கப்பல் சேவை நூற்றாண்டுகள் பழமை வாய்ந்தது.

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையினால் நிறுத்தப்பட்ட பயணிகள் கப்பல் சேவை 4 தசாப்தங்களாக தடைப்பட்டிருந்தது.

4 தசாப்தங்களின் பின்னர் இந்தியா - இலங்கை இடையிலான பயணிகள் கப்பல் சேவை கடந்த ஒக்டோபர் 14 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வட கிழக்கு பருவ மழையின் காரணமாக, குறித்த கப்பல் சேவையை ஒக்டோபர் 20 ஆம் திகதியுடன் தற்காலிகமாக நிறுத்துவதப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)


# விசேட நுளம்பு கட்டுப்பாட்டு வாரம்

(யாழ்ப்பாணம்)

விசேட நுளம்பு கட்டுப்பாட்டு வார நிகழ்வு இன்றிலிருந்து நாளை மறுதினம் வரை மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசம் முழுவதிலும் மேற்கொள்ளப்படவுள்ளது என யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

டெங்கு பெருக்கத்திற்கு சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்து அரச, தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள் மற்றும் ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதுடன் அன்றைய தினம் தங்கள் வீடுகளில் தரித்திருந்து களத்தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (நி)



வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கப்பலேந்திமாதா ஆலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை புனித செபஸ்தியார் பெருவிழா பங்குத்தந்தை அ.அமல்ராஜ் அடிகளார் தலைமையில் இடம்பெற்றது. பெருவிழா திருப்பலியை அருட்தந்தை ரமேஷ் அடிகளார் ஒப்புக் கொடுத்தார். (படம்: மகாலிங்கம்)

# வடமராட்சி கடற்பரப்பில் இறந்த நிலையில் கரையொதுங்கும் ஆமைகள்


(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் சில நாட்களாக ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கி வருகின்றன.

இந்த நிலையில் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் நேற்றுக் காலை மூன்று ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன.

கடலின் சீற்றம் காரணமாக காயமடைந்த ஆமைகள் உயிரிழந்து கரையொதுங்குவதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆமைகளை பிடிப்பதும், இறைச்சிக்காக பயன்படுத்துவதும் சட்டவிரோதம் என்பதால் கரையொதுங்கிய ஆமைகள் இவ்வாறு கைவிடப்பட்ட நிலையில் துர்நாற்றம் வீசக்கூடிய நிலையிலும் உருக்குலைந்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-60)





தலைவரைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு மிருசுவிலைச் சேர்ந்த துஸ்யந்தன் நந்தினி குடும்பத்தினரின் 9இலட்சம் ரூபாய் நிதிப் பங்களிப்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை வாழ்வாதார உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கெற்பேலிக் கிராமத்தில் முள் [illegible]

[illegible]

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 750 | 700 | 700 | 700 | 790 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 240 | 195 |
| பச்சைமிளகாய் | 1200 | 1200 | 1000 | 1200 | 1160 |
| தக்காளி | 500 | 700 | 700 | 800 | 630 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 130 | 150 | 150 | 110 |
| கோவா | 500 | 650 | 650 | 800 | 700 |
| கரட் | 1200 | 1000 | 1400 | 1600 | 1800 |
| பூசணி | 200 | 140 | 180 | 200 | 180 |
| புடோல் | 250 | 250 | 250 | 400 | 250 |
| வாழைக்காய் | 200 | 250 | 200 | 300 | 265 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 350 | 400 | 300 |
| பெரிய வெங்காயம் | 420 | 380 | 400 | 400 | 370 |
| பாகற்காய் | 800 | 700 | 800 | 1000 | 800 |
| வெண்டக்காய் | 600 | 800 | 300 | 600 | 500 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 200 | 100 |
| பயற்றங்காய் | 700 | 800 | 600 | 800 | 800 |
| லீக்ஸ் | 450 | 500 | 650 | 800 | 700 |
| பீற்றூட் | 800 | 450 | 700 | 800 | 750 |
| கறிமிளகாய் | 600 | 800 | 600 | 1000 | 650 |
| முருங்கைக்காய் | 2000 | --- | 2500 | --- | 2000 |
| போஞ்சி | 600 | 550 | 550 | 800 | 650 |
| கத்தரிதம்புள்ள | 700 | 500 | 400 | 600 | --- |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 120 | 150 | 120 |
| தேசிக்காய் | 200 | 350 | 250 | 200 | 290 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 100 | 70-100 | 85-107 |
| இராசவள்ளி | 400 | 500 | 400 | 500 | 400 |
| வெங்காயப்பூ | 350 | 350 | 400 | 600 | 340 |
| முள்ளங்கி | 180 | 200 | 200 | 300 | 180 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 60 | 140 |
| வல்லாரை | 80 | 250 | 50 | 80 | 60 |
| [illegible] | 100 | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் உரிமைகளை கட்டுப்படுத்தும் அதிகாரங்களை பொலிஸாருக்கு வழங்க வேண்டாம்

## மனித உரிமைகள் ஆணைக்குழு நீதியமைச்சருக்கு கடிதம்

(கொழும்பு)

**உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் மூலம் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை கட்டுப்படுத்தும் அதிகாரங்களை பொலிஸாருக்கு வழங்க வேண்டாம் என இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.**

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் குறித்த தனது அவதானிப்புகள் குறித்து இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்சவிற்கு கடிதமொன்றை எழுதியுள்ளது.

பயங்கரவாத குற்றம் என்பதற்கான வரைவிலக்கணத்தை கணிசமான அளவில் குறைக்க வேண்டும் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி பயங்கரவாத குற்றசந்தேகநபருக்கு எதிராக பிறப்பிக்கப்படும் தடுப்பு உத்தரவு நீதித்துறையின் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படுவதை உறுதி செய்யவேண்டும் எனவும் பரிந்துரைத்துள்ளது.

பயங்கரவாத குற்றச்செயல்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட எந்த சந்தேகநபருக்கும் எந்த நேரத்திலும் பிணை வழங்கும் அதிகாரம் நீதிபதிகளிற்கு வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் சுதந்திரம் பறிக்கப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் சட்டத்தின் உதவியை நாடுவதற்கான உரிமை வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என தெரிவித்துள்ள இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு இந்த உரிமையை கண்மூடித்தனமான, நியாயமற்ற நிபந்தனைகள் இன்றி வழங்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை கட்டுப்படுத்தும் அதிகாரங்களை பொலிஸாருக்கு வழங்க வேண்டாம் எனவும் இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு நீதியமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளது. (நி)

# இலங்கையின் உள்நாட்டு விடயங்களில் வெளிநாட்டு தலையீடு தேவையில்லை

## ரஷ்ய தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை காப்பு தொடர்பான சட்டமூலம் இலங்கையின் உள்விவகாரம் எனவும் அதில் வெளிநாட்டு தலையீடு தேவை இல்லை எனவும் இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் ஜகாரியன் நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உள்நாட்டு பிரச்சினைகளில் வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் தலையீடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்பது ரஷ்யாவின் கருத்து எனவும் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைகள் தமக்கு கவலையளிக்கக் கூடிய விடயம் அல்ல எனவும் தூதுவர் தெரிவித்துள்ளார்.

நிகழ்நிலை பாதுகாப்பு தொடர்பான சட்டவிதிகளை விதிப்பது இலங்கையின் உள்ளகப் பிரச்சினை என ரஷ்ய தூதுவர் கூறியதுடன், இந்த நாட்டில் உள்ள உள்ளூர் அரசியல் வாதிகள் மற்றும் வெளி நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளின் கருத்துக்கள் குறித்து ரஷ்ய தூதரகம் கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# மாணவர்களின் உணவுக்காக ஒதுக்கப்படும் நிதி அதிகரிப்பு

## கல்வி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலை மாணவர் ஒருவரின் உணவுக்காக ஒதுக்கப்படும் தொகையை 30 ரூபாவினால் அதிகரிப்பது தொடர்பில் கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

அதன்படி, இந்த தொகை 115 ரூபாவாக உயர்த்தப்படவுள்ளது.

முன்பு ஒரு சாப்பாட்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 85 ரூபாவாக இருந்தது.

அந்தத் தொகைக்கு இனி மதிய உணவு வழங்க முடியாது என்று உணவு வழங்குநர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சந்தையில் அரிசி, பருப்பு உள்ளிட்ட உலர் உணவுப் பொருட்களின் விலைகள் மீள்பரிசீலனை செய்யப்பட்டு இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# லஞ்சம் பெறுவோருக்கான அபராத தொகை அதிகரிப்பு

## அரசாங்கம் அதிரடி



(கொழும்பு)

தேர்தல் காலத்தில் வாக்குகளைப் பெறுவதற்காக லஞ்சம் பெறுவோருக்கு எதிரான அபராத தொகையினை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்குகளைப் பெறுவதற்கு லஞ்சம் பெற்ற குற்றம் உரிய ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்ட பின்னர் அவர்களுக்கான அபராதம் விதிக்கப்படும் எனவும் அரசாங்கம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி தற்போது விதிக்கப்படும் அபராதத் தொகையினை ஒரு லட்சமாக உயர்த்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் குற்றம் நிரூபிக்கப்பட்டவருக்கான அபராதத் தொகை 500 ரூபாவாக இருந்துள்ளது.

இந்நிலையில் தற்போது வாக்குகளைப் பெறுவதற்காக இலஞ்சம் பெறுவோருக்கு எதிரான அபராதத் தொகை 500 ரூபாவிலிருந்து 100,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (நி)

# பாடசாலை ஆரம்பமானதும் பாரிய போராட்டம் வெடிக்கும்

## இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் பாரிய போராட்டம் வெடிக்கும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பளங்கள் இருபதாயிரம் ரூபாவினால் உயர்த்தப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.பாடசாலை பிள்ளைகளது பெற்றோர் மீது தேவையற்ற வகையில் கல்விச் செலவுகள் திணிக்கப்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தக் காரணிகளின் அடிப்படையில் அடுத்த பாடசாலை தவணை ஆரம்பமானதும் பாரியளவு போராட்டம் வெடிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலைகளின் மின்சாரக் கட்டணத்தை பாடசாலை அபிவிருத்தி சபையின் ஊடாக மறைமுகமாக பெற்றோர் மீது அரசாங்கம் திணித்துள்ளது.

அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பளங்களை 20, 000 ரூபாவினால் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் பல்வேறு சந்தர்ப்பங்களில் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் உரிய பதில் கிடைக்கவில்லை.



பாடசாலை பிள்ளைகளின் பாதணிகள், அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் ஏனைய கற்றல் உபகரணின் விலைகள் தாங்கிக் கொள்ள முடியாத அளவில் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். (நி)

# குளவி கொட்டுக்கு இலக்காகி மூவர் வைத்தியசாலையில்

(தருமபுரம்)

வீதியால் சென்ற பலரை குளவிகள் கொட்டியதில் மூவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி செல்வா நகர் பகுதிக்கும் சேவியர் கடை சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் பயணித்தவர்களே குளவிக் கொட்டுக்கு இலக்காகி கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதி க்கப்பட்டுள்ளனர்.

அதில் ஒருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மருத்துமனை தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# இந்தியாவை சீண்டும் விதமாக சீனாவை புகழ்ந்த மாலைதீவு ஜனாதிபதி



(மாலைதீவு)

மாலைதீவில் சமீபத்தில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற முகமது முய்சு, இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்து வருகிறார்.

சீன ஆதரவாளரான அவர், மாலைதீவில் இருந்து இந்திய இராணுவ வீரர்கள் வெளியேற வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.

மேலும் சீன பயணத்தில் அந்நாட்டுடன் பல ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார்.

பின்னர் நாடு திரும்பிய முகமது முய்சு, இந்தியாவை மறைமுகமாக விமர்சித்தார்.

அவருக்கு மாலைதீவின் முக்கிய இரண்டு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. இந்தியாவுடனான மோதல் போக்கு நல்லதல்ல என அறிவுறுத்தின.

இந்த நிலையில் இந்தியாவை மீண்டும் சீண்டும் விதமாக முகமது முய்சு பேசி உள்ளார்.

இதுதொடர்பாக அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது,

மாலைதீவின் இறையாண்மையை சீனா மதிக்கிறது. இரு நாடுகளும் ஒருவரையொருவர் மதிக்கின்றன. சீனாவின் பெல்ட் அண்ட் ரோடு திட்டம் முன்முயற்சியானது. இது இருதரப்பு உறவுகளை புதிய நிலைக்கு கொண்டு சென்றுள்ளது.

மாலைதீவின் உள்விவகாரங்களில் தலையிடும் நாடு சீனா அல்ல. இதனால் தான் இரு நாடுகளுக்கும் இடையே வலுவான உறவு உள்ளது.

சீன-மாலைதீவின் உறவுகள் எதிர்காலத்தில் மேலும் வலுவடையும் என்று நம்பிக்கை உள்ளது. சீன ஜனாதிபதி ஜின்பிங் குடிமக்களின் நலனை முதன்மைப்படுத்தி வருகிறார். அவரது தலைமையின் கீழ் சீனாவின் பொருளாதாரம் புதிய உச்சத்தை எட்டியுள்ளது.

மாலைதீவின் இலக்குகளை அடைய சீன அரசு உதவும் என்று ஜின்பிங் என்னிடம் உறுதியளித்துள்ளார். மாலைதீவின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதும் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப முன்னேற்றத்தை கொண்டு வருவதும் எனது இலக்கு.

வளர்ந்த நாடுகளுடன் இணக்கமாக செயற்படும் நாடாக மாலைதீவை மாற்ற விரும்புகிறேன் என அவர் தெரிவித்தார். (நி)

# காசா போரை நிறுத்த ஈரான், கட்டார் தீவிரமுயற்சி



(டெஹ்ரான்)

காசா மீதான போரை நிறுத்துவதற்கான முயற்சிகள் தொடர்பாக ஈரான் மற்றும் கட்டார் வெளியுறவு அமைச்சர்கள் தொலைபேசியில் முக்கியமான கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளனர்.

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்த டோஹாவின் மத்தியஸ்த பலதரப்பு பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம் கண்டு வருவதாக கூறப்படுகிறது.

ஈரானிய வெளியுறவு அமைச்சர் ஹொசைன் அமிரப்துல்லாஹியன் மற்றும் கட்டார் வெளியுறவு அமைச்சர் முகமது பின் அப்துல்ரஹ்மான் பின் ஜாசிம் அல்தானி ஆகியோர் பேரழிவுகரமான மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்கான வழிகள் குறித்து பேசியதாக இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சகங்களும் நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளிப்படுத்தின.

ஈரானிய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட ஒரு அறிக்கையில், போரை நிறுத்துவதையும் அரசியல் தீர்வில் தீவிரமாக கவனம் செலுத்துவதையும் பெரும்பாலான அரசியல்வாதிகள் வலியுறுத்தியதாக இரு நாட்டு வெளியுறவு அமைச்சர்களும் உறுதிப்படுத்தினர் என தெரிவித்துள்ளது. (நி)

# பாகிஸ்தானில் கடும் குளிர் சுமார் 200 குழந்தைகள் பலி



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் நிலவும் கடும் குளிர் காரணமாக 200இற்கும் அதிகமான குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அங்கு நிலவும் கடும் குளிரால் குழந்தைகள் நிமோனியாவால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த குழந்தைகளில் பெரும்பாலானோர் நிமோனியா தடுப்பு மருந்து எடுத்துக் கொள்ளவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் உயிரிழந்த 220 குழந்தைகளும் 5 வயதிற்கும் குறைந்தவர்கள். இதேவேளை பஞ்சாப்பில் கடந்த வருடம் (2023) 990 குழந்தைகள் நிமோனியாவால் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# உலகின் மிகப்பெரிய பயணிகள் கப்பல்



உலகின் மிகப்பெரிய பயணிகள் சொகுசு கப்பலான 'ஐகான் ஆஃப் தி சீஸ்' தனது முதல் பயணத்தை தொடங்கியுள்ளது.

குறித்த கப்பல் புளோரிடாவின் மியாமியில் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்துள்ளதாகவும் கரீபியன் தீவுகளை 7 நாட்களுக்கு சுற்றி தனது முதல் பயணத்தை மேற் கொள்ளவுள்ளதாகவும் வெளிநாட்டு செய்தி தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பல் 365 மீற்றர் நீளமும் 20 தளங்களும் கொண்டதாகவும் அதிகபட்சமாக 7,600 பயணிகள் இதில் பயணிக்க முடியும் என்றும் கூறப்படுகிறது.

டைட்டானிக் கப்பலை விட ஐந்து மடங்கு பெரியதான இந்த கப்பலில் 07 நீச்சல் தடாகங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஒரே நா... மரண தன்...

## சர்வதேச ம...

(பக்தாத்)

ஈராக்கில் திடீரென 13 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டதற்கு சர்வதேச மனித உரிமை அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. ஈராக்கின் தெற்கு மாகாணத்தில் உள்ள நஸ்ரியாக் சிறையில் கடந்த 24 ஆம் திகதி

# மறதி நோயா... எதிர்வரும் காலங்க...

## ஆய்வில் வெ...

(ஒட்டாவா)

மறதி நோயாளர்களின் எண்ணிக்கை கனடாவில் எதிர்வரும் காலங்களில் அதிகரிக்குமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹமாஸின் தாக்குதலுக்கு உதவிய ஐ.நா உறுப்பினர்கள்

## ஐ.நாவுக்கான நிதியுதவியை நிறுத்திய உலக நாடுகள்

(ஜெனிவா)

**ஹமாஸின் ஒக்டோபர் 7ஆம் திகதி தாக்குதலிற்கு பாலஸ்தீன அகதிகளிற்கான ஐ.நா அமைப்பு உதவியதாக தெரிவித்து அந்த அமைப்பிற்கான நிதி உதவியை உலக நாடுகள் இடை நிறுத்தியுள்ளன.**




பிரிட்டன் உட்பட எட்டு நாடுகள் பாலஸ்தீனத்தின் அகதிகளுக்கான ஐ.நா அமைப்பிற்கான நிதி உதவியை நிறுத்தியுள்ளன.

உலகநாடுகளின் இந்த நடவடிக்கையை ஐ.நா அமைப்பு கண்டித்துள்ளது.

உலகநாடுகளின் இந்த முடிவு அதிர்ச்சியளிப்பதாக ஐ.நா அமைப்பு தெரிவித்துள்ளது.

யுஎன்ஆர்டபில்யூஏ என்பது பிரதானமாக காசாவிற்கான மனிதாபிமான அமைப்பு. இரண்டு மில்லியனிற்கும் மேற்பட்ட மக்கள் உயிர் வாழ்வதற்காக அந்த அமைப்பினை நம்பியிருக்கின்றனர் என அந்த அமைப்பின் தலைவர் பிலிப்பே லசாரினி தெரிவித்துள்ளார்.

சிறிய எண்ணிக்கையிலான பணியாளர்களிற்கு எதிரான குற்றச்சாட்டுகளை அடிப்படையாக வைத்து நிதி இடைநிறுத்தப்பட்டுள்ளமை அதிர்ச்சியளிக்கின்றது என தெரிவித்துள்ள அவர் ஏற்கனவே குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் நாங்கள் சில பணியாளர்களை இடைநிறுத்தியுள்ளோம் விசாரணைகள் தொடர்கின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

பிராந்தியத்தில் யுத்தம், இடப்பெயர்வு, அரசியல் நெருக்கடிகள் காணப்படும் சூழ்நிலையில் இந்த தடைகள் பொருத்தமற்றவை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# நாளில் 13 பேருக்கு தண்டனை விதித்த ஈராக்


## மனித உரிமை அமைப்பு கண்டனம்

...ருக்கு ...தற்கு ...மைப்பு ...க்கின் ...நஸ்ரி ...திகதி

ஒலிபெருக்கியில் 13 தண்டனை கைதிகளுக்கு மரண தண்டனை நிறை வேற்றப் போவதாக சிறை நிர்வாகம் திடீரென அறிவித்தது.

அதன்படி மறுநாள் 25 ஆம் திகதி அதிகாலை 13 கைதிகளுக்கும் மரண தண்டனை நிறைவேற்றியதாக கூறப்படுகிறது. முன்னதாக கொடுங்குற்ற வழக்குகளில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் குடும்பத்தினருக்கு முறையான அறிவிப்பு தெரிவித்த பின்னரே நாள் குறித்து தண்டனையை நிறைவேற்றி வந்த ஈராக் அரசு திடீரென 13 சிறை கைதிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றியுள்ளது. (நி)

# பிரிட்டன் மன்னர் சார்ல்ஸ் வைத்தியசாலையில் அனுமதி



(லண்டன்)

பிரிட்டன் மன்னர் மூன்றாம் சார்ல்ஸ் வைத்தியசாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டுள் ளதாக பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள் ளது.

கடந்த வாரம் வேல்ஸ் இளவரசி கத்தரின் அறுவை சிகிச்சை செய்த லண்டனில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலை யில் அவர் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

புரோஸ்டேட் விரிவாக்கம் காரணமாக அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

மேலும் மன்னர் தனது சொந்த திட்டமிட்ட சிகிச்சைக்கு முன்னதாக கடந்த வெள்ளிக்கிழமை காலை வைத்தியசாலையில் தனது மருமகளை சந்தித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

# ...யாளர்களின் எண்ணிக்கை ...லங்களில் கனடாவில் அதிகரிக்கும்

## ...ல் வெளியான தகவல்

தெரியவந்துள்ளது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் ஆய்வாளர்கள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

அதன்படி, கனடாவில், 2050ஆம் ஆண்டுகளில் மறதி நோயாளர்களின் 187 வீதமாக அதிகரிக்கும். அதன் போது, எதிர்வரும் 26 ஆண்டுகளின் முடிவில் மறதி நோயாளர் எண்ணிக்கை 1.7 மில்லியனாக உயர்வடையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த 2020ஆம்ஆண்டில்கனடாவில் மறதி நோயாளர்களின் எண்ணிக்கை சுமார் ஆறு லட்சமாக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வெந்தயம்

Botanical Name
- Trigonella foenum graeaum
Family -Fubaceae



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

கீரைக்காகவும் விதைக்காகவும் பயிரிட்டு வளர்க்கலாம். செடி இனத்தைச் சேர்ந்தது.

வெந்தய விதைகளானது வயிற்று உப்பிசம், உதடு வெடிப்பு ஆகியவற்றிற்கு மருந்தாக பயன்படுத்தப்படுகிறது. உணவை எளிதில் ஜீரணிக்கச் செய்யும். பசியை உண்டாக்கும். உடற்சூட்டைத் தணிக்கும்.

ஒரு தேக்கரண்டி வெந்தயத்தை வாயில் போட்டு ஒரு டம்ளர் மோர் குடிக்க வயிற்றுச்சூடு, வயிற்று வலி நீங்கும்.

உழுத்தம் பருப்பு அரை டம்ளர், வெந்தயம் ஒரு



தேக்கரண்டி ஆகிய இரண்டையும் நீரில் ஊற வைத்து பொடித்து விழுதாக இடித்து , நல்லெண்ணெய் 6 தேக்கரண்டியும் சிறிது மஞ்சள் தூளும் கலந்து வாணலியில் இட்டு காய்ச்சி களிப்பக்குவத்தில் பொறுக்கும் சூட்டில் சாப்பிட குடற்புண் நீங்கும்.

வெந்தயம் ஒரு தேக்கரண்டி, பெருங்காயம் சிறிதாகச் சேர்த்து வாணலியில் வறுத்து பொடி செய்து சிறிது மஞ்சள் தூள், நெய் சேர்த்து சூடாக்கி சோற்றுடன் பிசைந்துண்ண உடற்சூடு தணியும். வெந்தய விதையை வறுத்து பொரித்து ஊற குடிநீராக 60 மில்லி அளவு அருந்தி வர உடற்சூடு தணியும்.

வெந்தயம் 250 கிராம், கருஞ்சீரகம் 50 கிராம், ஓமம் 100 கிராம் தனித்தனியாக மெல்லிய நெருப்பில் பொன்நிறமாக வறுத்து எடுத்து, தனித்தனியாக பொடித்து பின்பு மூன்றையும் ஒன்றாக பொடித்து அரித்து கண்ணாடி புட்டியில் போட்டு பத்திரப்படுத்தவும். வெந்நீர் ஒரு டம்ளரில் 1 தேக்கரண்டி தூளை கலந்து இரவு சாப்பாட்டின் பின்பு எடுக்கவும். இதற்கு பின்பு எந்த உணவும் எடுக்கக் கூடாது. தொடர்ந்து எடுத்துவர கெட்ட கொலஸ்ரோலை குறைக்கும்.

இரத்தத்தில் அதிகரித்த குளுக்கோஸை கட்டுப்படுத்தும். அதி உயர் குருதி அமுக்கத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும் உதவும். தோலில் சுருக்கம் ஏற்படுவதை தடுக்கக் கூடியது. மலமும் நன்கு இளகி வெளியேறும்.

ஒரு தேக்கரண்டி வெந்தயத்தை ஒரு டம்ளர் தண்ணீரில் ஊற வைத்து மறுநாள் காலையில் அருந்தி வர உடற்சூடு , வெள்ளை சாய்தல் நீங்கும். ஒரு மேசைக்கரண்டி வெந்தயத்தில் 3 கிராம் அளவு நார்ச்சத்து எமக்குக் கிடைக்கும்.

அதனால் வெந்தயம் தினமும் சாப்பிடுவது உடலிற்கு சிறந்தது. வயிறு சம்பந்தமான கோளாறுகள், குடற்புண், உடற்சூடு, மலக்கட்டு, நீரிழிவு நோயாளிகள் தினமும் 1-2 தேக்கரண்டி அளவு வெந்தயம் எடுத்து வர சிறந்த பலனைக் கொடுக்கும்.

தாய்ப்பாலூட்டும் தாய்மார் வெந்தயம், உள்ளி பசுப்பாலில் சேர்த்து அருந்தினாலும் தாய்ப்பால் சுரப்பை அதிகரிக்கச் செய்யும். ஈரலின் தொழிற்பாடு குறையும் போது பித்த உப்புக்களும் குறைய ஆரம்பிக்கும்.

இதனால் பசியும் குறையும். இந்த சமயத்தில் 1 1/2 தேக்கரண்டி வெந்தயம் தொடர்ந்து சாப்பிட்டு வர மேற்படி குறி குணங்கள் குறைய ஆரம்பிக்கும்.

ஆனாலும் கழிச்சல் இருக்கும் போது வெந்தயம் எடுக்கக் கூடாது. ஏனெனில் அதில் அதிகளவான நார்ச்சத்து காணப்படுவதால் ஆகும். வெந்தயம் வெறும் வயிற்றில் எடுப்பது சிறந்ததாகும்.

மேலும் அதிக உணவு எடுத்தால் உணவுடன் அதிகளவு வெந்தயத்தை (1 1/2 தேக்கண்டி) எடுப்பது சிறந்ததாகும். முக்கியமான இதன் மருத்துவ குணங்களுக்கு அதில் இருக்கும் இரசாயனச் சத்தான கலக்ரோமான், சப்போனின், 4 -கைரொக்ஸி ஐசோலியூசின் 3 முக்கிய வேதியல் பொருளாகும். இதில் 4-கைரொக்ஸி ஐசோலியூசின் எனும் வேதியல் பொருளானது இன்சுலின் எதிர்ப்புத் தன்மையைக் குறைக்கக் கூடியது. இதனால் நீரிழிவு நோயாளிக்கு இரத்தத்தில் சீனியின் அளவைக் கட்டுப்படுத்தும்.

இதற்கு 20-25 கிராம் வெந்தயத்தை எடுக்கலாம். விளையாட்டு வீரர்களுக்கு வெந்தயம் சிறந்த பயனைக் கொடுக்கும். தசைகளில் கிளைக்கோஜின் உருவாகும் வேகத்தை அதிகரிக்கும். இதனால் விளையாட்டு வீரர்கள் 15-20 கிராம் வெந்தயத்தை தினமும் சாப்பிடலாம்.மாதவிடாய் நின்ற பெண்களுக்கு ஏற்படும் உடற்களைப்பு , என்பு பாதிப்பு போன்ற நிலைமைகளை 10-15 கிராம் அளவு தினமும் சாப்பிடலாம். ஓமோன் பிரச்சினைகளைச் சீராக்கக்கூடியது.

வெந்தயத்தைத் தண்ணீரில் ஊற வைத்து அரைத்து சிவத்தப்பச்சரிசி கஞ்சியில் கலந்து குடித்தால் உடற்சூடு தணியும். பசியும் கட்டுப்பாட்டில் இருக்கும். அதிக உணவு எடுப்பதையும் தவிர்க்கலாம். ஏனெனில் நார்ச்சத்தும் இருப்பதால் ஆகும்.

# இன்று ஒரு தகவல் 20



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## அணுகுமுறை

அடுத்தவர்கள் மனம் புண்படாமல் நடந்து கொள்வது என்பது ஒரு தனிக்கலை. இந்த உலகத்திலே எல்லோரும் இந்த ஒரு விடயத்தை மட்டும் சரியாக கடைப்பிடித்தால் போதும் எல்லோரும் சந்தோசமாக இருந்துவிட்டுப் போயிடலாம்.இதைவிட பெரிய கலை ஒன்று இருக்கிறது. அது எது தெரியுமா?ஒருவர் ஒரு தவறு செய்துவிடுகிறார், அவர் செய்த தவறை அவருக்கு நாசூக்காக சுட்டிக் காட்ட வேண்டும்.அதே நேரத்திலே அவர்களுக்கு எங்கள் மேலே கோபமோ வருத்மோ வரக்கூடாது. இது ஒரு தனிக்கலை தான்.

சில பேருக்கு இது கைவந்த கலையாக இருந்திருக்குது. அவர்கள் எல்லாம் வாழ்க்கையிலே வெற்றிகரமாக இருந்திருக்கிறார்கள். சார்லஸ் ஸ்வாப் அப்ப என்று ஒருத்தர். பல இரும்பு ஆலைகளுக்குச் சொந்தக்காரர். அவர் சிறந்த நிர்வாகி என்று பேர் எடுத்தவர். பகல் உணவு சமயத்திலே தொழிற்சாலையை சுத்திப் பார்த்துவிட்டு வரலாம என்று புறப்பட்டார். அவர் பாட்டுக்கு ஒவ்வொரு இடமாக பார்த்துவிட்டு போய்க் கொண்டே இருந்தார். ஒரு இடத்திலே தொழிலாளர்கள் சில பேர் இயந்திரங்களுக்குப் பக்கத்திலேயே நின்று கொண்டு புகைப்பிடித்துக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் தலைக்கு மேலேயே ஒரு அறிவிப்பு பலகை. அதிலே என்ன எழுதியிருக்கு தெரியுமா?

"இங்கே புகை பிடிக்காதீர்கள்" அப்படி என்று எழுதியிருக்கு. அந்த இடத்திலே செய்யக்கூடாத ஒரு காரியத்தை அவர்கள் செய்து கொண்டிருந்தார்கள்.

ஆலை அதிபர் இதைப்பார்த்தார். அவர் கொஞ்சம் கூட கோபப்படவில்லை. கத்தவில்லை. அவர் என்ன செய்தார் தெரியுமா? தன்னுடைய பையிலே இருந்த விலை உயாந்த சுருட்டுப் பெட்டியை எடுத்தார். அதை எடுத்துப் பிரித்தார். மிகவும் உயர்ந்த ரக சுருட்டு. அங்கே இருந்த தொழிலாளிகள் எல்லோருக்கும் ஆளுக்கு ஒன்று கொடுத்தார். கொடுத்து விட்டுச் சொன்னார்.

இது மிகவும் அருமையான சுருட்டு. பிடிச்சுப் பாருங்க. ஆனால் ஒன்று, இதை நீங்கள் இங்கேயே புகைக்க வேண்டாம். வெளியே போய் புகைத்துப் பாருங்கள். இப்படி சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டுப் போய்விட்டார். அதற்குப்பின்பு அவர்கள் அந்த தப்பை செய்யவில்லையாம். நமக்கு எல்லாம் இது மாதிரி ஒரு காட்சியைப் பார்த்தால் உடனே கோபம் வந்துவிடும். அது தான் கஷ்டம்.

பிரபலமான போட்டோ கிராபர் ஒருவர் இருந்தார். பிரபலமான நடிகையை போட்டோ எடுப்பதற்காக போனார். போட்டோ எடுத்தார். அதை பிரிண்ட் போட்டு கொண்டு போய் கொடுத்தார். அந்த அம்மா வாங்கிப் பார்த்தார். அவர்களுக்கு ஒரே கோபம். போட்டோ நல்லா இல்லையாம்.

நீங்கள் 5 வருடத்துக்கு முன் ஒரு தடவை என்னை போட்டோ எடுத்தீங்க. அது அழகாக இருந்தது. அது மாதிரி இது அழகாக இல்லையே என்று சத்தம் போட்டார். போட்டோகிராபர் மனசுக்குள்ளே நினைத்துக் கொண்டார். 5 வருசத்துக்கு முன்னாடி இந்த அம்மா இளமையா இருந்தாங்க. இப்போ வயசாகிவிட்டது. அது யாருடைய குற்றம். இதை மனதிலே நினைத்துக் கொண்டார். ஆனால் அந்த அம்மாவிடம் இவர் என்ன சொன்னார் தெரியுமா?

சாரி மேடம். அஞ்சு வருடத்துக்கு முன்னாடி நான் இதைவிட இளமையாக இருந்தேன். இப்போ வயதாகி விட்டது. அதனாலே முன்னாடி மாதிரி திறமையாக படம் எடுக்க முடியவில்லை என்று நினைக்கிறேன் அப்படி என்றாராம். அவ்வளவு தான். அந்த அம்மா அதை ஒத்துக் கொண்டு சமாதானமாகி விட்டார். இது தான் நான் சொன்ன அந்த தனிக்கலை. ஆனால் ஒரு விடயம் இந்தக் கலையை சாமர்த்தியமாக பயன்படுத்துறதும் ஒரு கலை. சாமர்த்தியமாக பயன்படுத்தவில்லை என்றால் என்ன ஆகும் தெரியுமா?

என் பிரண்டுக்கு ஏற்பட்ட கதிதான் ஏற்படும். அவன் என்ன செய்திருக்கிறான். ஒரு நாள் காலையில் எழுந்து உட்கார்த்திருக்கிறான். அவன் மனைவி காப்பி போட்டுக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறார். காப்பி நல்லாவே இல்லை. இதை நாசூக்காக மனைவி மனசு புண்படாமல் சொல்வது எப்படி என்று யோசித்திருக்கிறான்.

நான் சொன்ன யோசனை ஞாபகத்திற்கு வந்திருக்கு. உடனே அதைப் பயன்படுத்தியிருக்கான் எப்படி தெரியுமா? நீ கொடுத்த காப்பி நல்லா இல்லை என்று சொல்லுறதுக்குப் பதிலாக இப்படி சொல்லியிருக்கான்.

இதோ பாரு டார்லிங். நேற்றைக்கு காலையிலே இந்த தெருமுனையிலே இருக்கிற கடையிலே ஒரு டீ குடித்தேன். மிகவும் நல்லா இருந்தது என்று சொல்லியிருக்கான். அவ்வளவு தான். விளைவு என்ன தெரியுமா?அப்படி என்றால் நீங்கள் தினம் அந்த தெருமுனை கடையிலேயே டீ குடித்துக் கொள்ளுங்கள். வீட்டிலே காப்பி கிடையாது என்று சொல்லிவிட்டார். இப்பெல்லாம் தினமும் காலையிலே அந்த தெருமுனை டீக்கடையிலே அவனை தவறாமல் சந்திக்கிறது உண்டு. இப்பொழுது அவன் என்கிட்ட முகம் கொடுத்து பேச மாட்டேன் என்கிறான். என் யோசனையையும் கேட்க மாட்டேன் என்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகக்கட்டுப்பாட்டை இழந்து கால்வாயினுள் பாய்ந்த பேருந்து



(தருமபுரம்)
கிளிநொச்சியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த தனியார் போருந்து கால்வாயில் பாய்ந்து விபத்திற்குள்ளானது. கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கண்டாவளைப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக் கிழமை இச்சம்பவம் இடம் பெற்றது.

வேகக்கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த மின்கம்ப த்தினை உடைத்துக் கொண்டு கால்வாயினுள் பாய்ந்ததில் எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்பட வில்லை. (நி-316)

# கிராம அபிவிருத்திச் சங்கம் சுமார் 10 வருடங்களாக இல்லை

## மணவாளன் பட்ட முறிப்பு கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)
முல்லைத்தீவு மணவாளன் பட்டமுறிப்பு கிராமத்தில் கிராம அபிவிருத்திச் சங்கத்தினை தெரிவு செய்யுமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மணவாளன்பட்ட முறிப்பு மேழிவனம் கிராமங்களை உள்ளடக்கி இத்தெரிவு இடம் பெற வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக இக்கிராமத்தில் கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவு செய்யப்படவில்லை எனவும் இதன் காரணமாக கிராமத்திற்கான உதவிகளைப் பெற்றுக் கொள்வதிலும் கிராமத்தின் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கும் பொதுஅமைப்பு இல்லை.

எனவே விரைவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தை ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் மணவாளன்பட்டமுறிப்பு, மேழிவனம் ஆகிய கிராம ங்களை உள்ளடக்கி கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவு செய்யப்பட வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-350)

# மேழிவனம் குளத்தினை புனரமைக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)
முல்லைத்தீவு மேழிவனம் கிராமத்தில் சேதமடைந்து காணப்படுகின்ற குளத்தினை புனரமைத்துத் தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இக்கிராமத்தில் பல ஆண்டுகளாக சேதமடைந்த நிலையில் குளம் ஒன்று காணப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டிற்கு பின்னர் பல தடவைகளில் அதிகாரிகள் வந்து குளத்தினை பார்வையிட்டுச் சென்றாலும் குளத்தினை புனரமைப்பதற்கு எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இக்குளம் புனரமைக்கப்பட்டால் 300 ஏக்கருக்கு அதிகமான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற் கொள்ள முடியும். இது தொடர்பாக பல தடவைகள் கோரிக்கைகள் விடுக்கப்பட்டும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என கிராம மக்கள் தெரிவித்தனர். (நி-350)

# கிருஸ்ணபுரத்திற்கு பேருந்து சேவை வேண்டும்

## கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)
கிளிநொச்சி கிருஸ்ணபுரம் கிராமத்திற்கான பேருந்து சேவை ஒன்றினை நடத்துமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி நகரில் இருந்து சேவியர்கடைச் சந்தி, விநாயகர்புரம், ஆனந்தநகர், கிருஸ்ணபுரம் கிராமங்களைச் சென்றடைந்து இரணைமடுச் சந்தி வழியாக மீண்டும் கிளிநொச்சி நகரை சென்றடையக் கூடியவாறு பேருந்து சேவை அமைய வேண்டும்.

தற்போது மேற்படி வழித்தடத்தில் பேருந்து சேவைகள் இடம்பெறாததன் காரணமாக கிராமமக்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

இப்பகுதியில் உள்ளூர் போக்குவரத்தினை நடத்துவதன் மூலம் பெருமளவு மக்கள் நன்மையடைவார்கள்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலும் கடந்த காலங்களில் நடைபெற்ற கூட்டங்களில் கிராமங்களுக்கான போக்குவரத் துகள் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-350)




வர்சனா





இயலினி




பவித்திரன்




விதுர்சிகா




துர்சிகன்




பிரியதர்சினி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 391





"ஈழ நாட்டில் ஏதோ யுத்தம் நடக்கிறது என்று கேள்விப்பட்டேன். இங்கே வந்து பார்த்தால் ஒரே உற்சவமாயிருக்கிறதே" என்றான் வந்தியத்தேவன்.

"பழையாறையில் ஸ்ரீஜயந்தி உற்சவம் நடந்தது என்று நீர் சொல்லவில்லையா?"

"ஆமாம். ஆனால் பழையாறை சோழ நாட்டில் இருக்கிறது."

"அநுராதபுரம் ஈழநாட்டில் இருக்கிறது. அதனால் என்ன? சோழ நாட்டிலும் சுந்தர சோழ சக்கரவர்த்தியின் ஆட்சிதான் ஈழநாட்டிலும் அவருடைய செங்கோல் ஆட்சிதான்.!"

"ஆனால் இந்த நாட்டில் இன்னும் பகைவர்கள் இருக்கிறார்களாமே?"

"பகைவர்கள் எங்கேயோ இருக்கிறார்கள். அதற்கு இங்குள்ள ஜனங்கள் என்ன செய்வார்கள்? போர்க்களத்தில் போர் நடக்க வேண்டியது தான். ஊர்ப்புறத்தில் உற்சவமும் நடக்க வேண்டியது தான். திருமலை! நீ என்ன சொல்கிறாய்?" என்றார் இளவரசர்.

"இங்கே வெளிப்பகைவர்கள் இருந்தால் அங்கே உட்பகைவர்கள் இருக்கிறார்கள். வெளிப்பகைவர்களைக் காட்டிலும் உட்பகைவர்களே அபாயமானவர்கள். ஆகையால் இளவரசர் இந்த நாட்டிலேயே உற்சவமும் யுத்தமும் நடத்திக் கொண்டிருப்பது நல்லது என்று அடியேன் சொல்லுகிறேன்" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"அழகாய்த்தானிருக்கிறது. வெளிப்பகைவர்களை விட உட்பகைவர்களே அபாயகரமானவர்கள் என்றால், அங்கே தானே நம் இளவரசர் இருக்க வேண்டும்? அபாயம் அதிகம் உள்ள இடமே வீர புருஷர்கள் இருக்க வேண்டிய இடம் அல்லவா?" என்றான் வந்தியத்தேவன்.

"வீரம் என்றால், அசட்டுத்தனமாகச் சதிகாரர்களிடமும் கொலைகாரர்களிடமும் போய் அகப்பட்டுக் கொள்ள வேண்டும் என்று அர்த்தமா? வீராதி வீரனாகிய நீ அங்கே போய் அகப்பட்டுக் கொள்வதுதானே? எதற்காகத் தப்பி ஓடி வந்தாய்?" என்றான் திருமலை.

"போதும்! போதும்! நீங்கள் ஒரு யுத்தம் இங்கே ஆரம்பித்து விடவேண்டாம்!" என்று அருள்மொழிவர்மர் சமாதானம் செய்வித்தார்.


இருட்டிய பிறகு மூன்று பேரும் அந்நகருக்குள் பிரவேசித்தார்கள். அன்று யாத்திரீகர்கள் யாரையுமே கோட்டை வாசலில் தடுத்து நிறுத்தவில்லை. எல்லோரையும் தங்கு தடையின்றி விட்டுக் கொண்டிருந்தார்கள். காவலர்கள் சும்மா நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். கூட்டத்தோடு கூட்டமாக நம் கதாபுருஷர்கள் மூவரும் நகருக்குள் பிரவேசித்துச் சென்றார்கள்.

அநுராதபுரத்தின் வீதிகளிலும் ஜனக்கூட்டம் அளவில்லாமலிருந்தது. 'சாது! சாது!' என்ற கோஷம் வானை அளாவியது. ஆங்காங்குப் பல மாடமாளிகைகளும் விஹாரங்களும் இடிந்து கிடப்பதை வந்தியத்தேவன் கண்டான். இடிந்துபோன பல கட்டிடங்கள் புதுப்பிக்கப்பட்டிருப்பதையும் பார்த்தான். புதுப்பிக்கும் திருப்பணி இளவரசர் கட்டளையின் பேரிலேதான் நடந்திருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான். இப்படியெல்லாம் இவர் செய்து வருவதின் நோக்கம்தான் என்ன? ஜெயிக்கப்பட்ட நாட்டின் மக்களுக்கு இவர் ஏன் இவ்வளவு சலுகை காட்டுகிறார்? ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்துடன் அடிக்கடி சண்டை போட்டு வருகிறார்கள் இந்தச் சிங்கள அரசர்கள். இத்தகைய நெடுங்காலப் பகைவர்களின் தலைநகரத்தை அழித்துக் கொளுத்தித் தரைமட்டமாக்குவதற்கு மாறாக, இடிந்து போன கட்டடங்களைப் புதுப்பித்துத் திருவிழாக்கள் நடத்த இவர் அனுமதித்து வருகிறாரே? இது என்ன அதிசயம்! இதில் ஏதோ மர்மம் இருக்கத்தான் வேண்டும். அது என்னவாயிருக்கும்? வந்தியத்தேவனுடைய உள்ளத்தில் ஒரு விந்தையான எண்ணம் உதித்தது. ஆம், ஆம்! அப்படித்தான் இருக்க வேண்டும். சோழ நாட்டில் இவருக்கு உரிமை எதுவும் இல்லை. பட்டத்து இளவரசர் ஆதித்த கரிகாலர் இருக்கிறார். (தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## ஆடு மேய்ப்பவரும் காட்டு ஆடுகளும்



ஆடு மேய்க்கிற ஒருவர் காட்டுக்குள்ள போய் ஆடு மேய்ச்சிகிட்டு இருந்தார். அது மழை காலம் என்கிறதனால காட்டுக்குள்ள நிறைய உணவு கிடைக்கல, அதனால் தன்னோட வீட்டு விவசாய நிலத்தில விளைஞ்ச புள்ள போட்டு ஆடுகளை கொஞ்ச நாள் வளர்க்கலாம்னு நினைச்சாரு.

அந்த நேரத்துல சில காட்டு ஆடுகளும் அவரோட மந்தையில் வந்து சேர்ந்துச்சுங்க.

அதுங்களுக்கு தன்னோட வீட்டுல இருந்த சாப்பாட்டை கொடுத்ததும், அதுங்க அங்கேயே தங்கிடுச்சுங்க.

செலவு இல்லாம நிறைய ஆடுகள் கிடைச்சதுல அந்த ஆடு மேய்கிறவருக்கு ரொம்ப சந்தோசம். அதனால புதுசா வந்த காட்டு ஆடுகளுக்கு நிறைய உணவும், ஏற்கனவே இருந்த ஆடுகளுக்கு உயிர் வாழ அளவுக்கு சாப்பிடு கொடுத்தாரு.

மழைகாலம் முடிஞ்சதும் அந்த காட்டு ஆடுகள் தங்களோட வாழ்விடமான காட்டுக்கு போக ஆரம்பிச்சுச்சுங்க

அத பார்த்த ஆடு மேய்கிறவருக்கு ரொம்ப வருத்தமா போச்சு, நான் உங்களுக்கு நிறைய சாப்பாடு கொடுத்ததும் இப்படி உங்க வாழ்விடத்துக்கு போறீங்களேன்னு கேட்டாரு.

அதுக்கு அந்த காட்டு ஆடுகள் சொல்லுச்சு, நீங்க புது ஆடுகள் வந்ததும் பழைய ஆடுகளுக்கு உணவு கொடுக்காம புது ஆடுகளுக்கு நிறைய உணவு கொடுத்தீங்க.

நாங்க உங்களோடவே தங்கிட்டா நாங்க பழைய ஆடா மாறிடுவோம், புது ஆடு எதாவது இங்க வந்துச்சுனா எங்களுக்கு போதுமான உணவு கொடுக்க மாட்டீங்க.

அதனால நாங்க எங்க வழிய பார்த்துகிட்டு போறோம்னு சொல்லிட்டு, காட்டு பகுதிக்கு போயிடுச்சுங்க.

புது ஆடுகள் வந்ததும் பழைய ஆடுகளை உணவு சரியா கொடுக்காம விட்டத நினைச்சு வருத்தப்பட்டாரு அவரு

நீதி : புதிய நண்பர்களுக்காக பழைய நண்பர்களை மோசமாக நடத்துவது விவேகமற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் தவறுகளை உணரும்போது, அதை மீண்டும் செய்யாதிருக்கவும் உறுதி எடுக்க வேண்டும்.
~ ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கும்பாபிஷேகத்தில் இடம்பெறும் அஷ்டபந்தனம் பற்றி அறிமினே!

இந்து ஆலயங்களில் இடம்பெறும் மகா கும்பாபிஷேகம் என்பது முதன்மைக்குரிய கிரியை.

இக்கும்பாபிஷேகத்தை திருக்குடமுழுக்கு எனத் தமிழில் கூறுவர்.

பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மகா கும்பாபிஷேகம் செய்யப்பட வேண்டும் என ஆகமங்கள் கூறுகின்றன.

அதாவது இந்து ஆலயங்களில் நாள்தோறும் நடைபெறுகின்ற நித்திய பூசை வழிபாடுகளில் ஏற்படக்கூடிய தவறுகள், குறை குற்றங்களை நிவர்த்திக்கும் பொருட்டு நைமித்தியம் என்று சொல்லப்படும் மகோற்சவம் வருடந்தோறும் இடம்பெறும்.

எனினும் 12 ஆண்டுகளில் மீண்டும் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து மகா கும்பாபிஷேகம் செய்ய வேண்டும்.

இதற்குக் காரணம் நிறைய உண்டு. பொதுவில் ஆலயங்களில் உள்ள மூலவிக்கிரகங்கள் கருங்கல்லில் செதுக்கப்பட்டு அந்த விக்கிரகங்கள் கருவறைகளில் உள்ள பீடங்களில் வைக்கப்பட்டு, பீடத்திலிருந்து விக்கிரகம் அசையாத வண்ணம் அஷ்டபந்தனம் எனும் மருந்து சாத்தப்படும்.

இவ்வாறு சாத்தப்படுகின்ற மருந்து 12 ஆண்டுகளில் தன்னிலை இழக்கும்.

மருந்தின் தன்மை அற்றுப்போகும்போது விக்கிரகம் பீடத்தினின்றும் விடுபடும்.

இதை இன்னும் ஒருபடி மேற்சென்று கூறுவதாயின், பீடத்துக்கும் விக்கிரகத்துக்கும் இடையில் இடைவெளி ஏற்பட்டு விக்கிரகம் அசையக்கூடிய நிலைக்கு வந்துவிடும்.

எனவே விக்கிரகங்களை வெளியில் எடுத்து பாலஸ்தாபனம் செய்து, ஆலயப் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று மீளவும் கும்பாபிஷேகம் செய்யப்படும்.

மகாகும்பாபிஷேகத்தின்போது அஷ்டபந்தனம் எனும் எட்டுவகையான சாந்துக்கள் கொண்டு விக்கிரகங்கள் கருவறைகளில் உள்ள பீடங்களில் எழுந்தருளச் செய்யப்படும்.

இங்கு எண்ணெய்க் காப்பு செய்வதன் நோக்கம் மூலஸ்தானத்தில் இருக்கக் கூடிய கருங்கல்லாலான விக்கிரகங்கள் நல்லெண்ணெய்யால் இளகும் தன்மையைப் பெறுவதோடு, அஷ்டபந்தனம் எனும் மருந்து நல்லெண்ணெய்யால் இறுக்கமடையும்.

ஆக, கும்பாபிஷேகத்துக்கு முன்னதாக எண்ணெய் சாத்துவதன் நோக்கம் மேற்குறிப்பிட்டதற்கானதென்பது உணர்தற்குரியது.

இதை நாம் கூறும்போது இஃதென்ன கும்பாபிஷேக விளக்கம் என்று நீங்கள் நினைக்கலாம்.

எல்லாம் காரணத்தோடுதான். ஆலயங்களில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆலயப் புனரமைப்பும் அஷ்டபந்தனமும் செய்து மகா கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்பது போல, அந்தந்த அமைப்புகள் தமக்குரியதான உபவிதிகளின்படி கூட்டங்களை, விசேட கூட்டங்களை, பொதுக்கூட்டங்களை நடத்த வேண்டும்.

அதைச் செய்யாவிட்டால், பீடங்களில் இருக்கக்கூடிய விக்கிரகங்கள் அசையத் தொடங்கிவிடும்.

அவ்வாறான நிலைமை ஏற்பட்டால், பின்னர் அவற்றை ஒழுங்குபடுத்துவது மிகவும் கடினம்.

இதைக்கூறும்போதுதான் இதற்கு நல்ல உதாரணம் இலங்கைத் தமிழரசுக் கட்சி எனச் சுட்டிக்காட்ட முடியும்.

ஆம், நீண்டநெடுங்காலம் தமிழரசுக் கட்சி புனருத்தாரணம் செய்யாமல், திருக்குடமுழுக்கு நடத்தப்படாமல் இருந்ததால் இப்போது கும்பாபிஷேகம் செய்ய முற்பட, எல்லா விக்கிரகங்களும் எழுந்து ஆடத் தொடங்கியுள்ளன.

அவற்றையெல்லாம் அடக்கி அந்தந்த இடத்தில் இருத்தி, அபிஷேக ஆராதனை செய்வதென்பது கடினமான காரியமே.

## பேராசிரியர் சண்முகதாஸ் தம்பதியர் தமிழியலுக்கு ஆற்றிய பங்களிப்பு

### நிகழ்நிலையில், உரைத்தொடர் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

புதுடில்லியில் உள்ள ஜவகர்லால்நேரு பல்கலைக்கழகத்தின் சிறப்பு நிலைத் தமிழ்த்துறை நடத்தும் தமிழியலுக்கு, பேராசிரியர்கள் சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரின் பங்களிப்புப் பற்றிய உரைத்தொடர், இன்று தொடக்கம் மூன்று நாட்கள் நிகழ்நிலை ஊடாக நடைபெறவுள்ளது.

இன்று மாலை 6 மணி தொடக்கம் 8 மணிவரை இடம்பெறும் நிகழ்வில், நோக்கவுரையை பேராசிரியர் இரா. அறவேந்தன், வாழ்த்துரையை துணைவேந்தர் பேராசிரியர் சாந்தி ஸ்ரீ பண்டிட், தமிழ் - ஜப்பானியப் பண்பாட்டு ஒப்பாய்வை சிரேஷ்ட விரிவுரையாளர் செல்வஅம்பிகை நந்தகுமாரன்,

மன்யோசு காதற் பாடல்களின் மொழிபெயர்ப்பை தமிழ்நாடு மத்திய பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நி.கனகராசு ஆகியோர் நிகழ்த்த,

தொடர்ந்து கருத்துரையை ஜப்பான் கச்சுயின் பல்கலைக் கழக மேனாள் ஆய்வுப் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்துவார்.

கூகுள் மீட் https://meet.google.com/giv-yphd-shd (ந-7)

## பதவி ஆசைக்காகவே ரணில் பாராளுமன்றை ஒத்திவைத்தார்

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

(கொழும்பு)

பாராளுமன்றக் கூட்டத் தொடர் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது ஏன்? என்பதற்கு விளக்கமளித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் இது புதுமையான அரசாங்கம்.

ஜனாதிபதி ரணில் பதவிக்கு வந்து பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்தி வைத்தது எத்தனையாவது தடவையோ தெரியாது என்றார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துரைத்த அவர்,ஜனாதிபதி பதவியின் ருசியை நன்கு ருசிக்க வேண்டும் என்றபடியாலும், இறுதி அக்கிராசன உரையினை நிகழ்த்துவதற்குமே கூட்டத்தொடரை ஒத்தி வைத்தார்.

2048 ஆம் ஆண்டு நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்று கதையைக் கட்டமைத்து தேசத்திற்குப் பொய்யாக உரையாற்ற அவர் தயாராகி வருகிறார்.

இவருடைய இக்கதைகளை பல தடவை நாம் கேட்டிருக்கிறோம். பதவி பறிபோக முன்னர் மீண்டும் ஒருமுறை அக்கிராசன உரையை நிகழ்த்தவே இந்த பிரயத்தனம் என்றும் மரிக்கார் எம்.பி குற்றஞ்சாட்டினார்.(ந-7)

## இலங்கை மீனவர் 13 பேர் மாலைதீவுக் கடலில் கைது

மாலைதீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இலங்கை மீனவர்கள் மற்றும் அவர்கள் பயணித்த 2 மீன்பிடி படகுகளையும் அந்நாட்டு கரையோரப் பாதுகாப்பு படை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

ஒரு கப்பலில் 7 மீனவர்களும், மற்றொரு கப்பலில் 6 மீனவர்களும் இதில் அடங்குவர்.

இந்த இரண்டு மீன்பிடி படகுகளும் கடந்த 25ஆம் திகதி பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு படகுகளும் தற்போது ஹா அலிஃப் ஃபில்லதூ துறைமுகத்தில் நங்கூரமிட்டு, நூராதீன் என்ற கடலோர பாதுகாப்புப் படையின் கட்டுப்பாட்டில் இருப்பதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மாலைதீவு கடற்பரப்பில் இந்திய மற்றும் இலங்கை மீன்பிடி கப்பல்கள் சட்டவிரோதமாக மீன்பிடிப்பது வழமையாகியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. (ந-7)

## முன்பள்ளிக் கட்டமைப்பில் முறையாக பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை

### கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டின் முன்பள்ளி கட்டமைப்பில் முறையாக பயிற்சி பெற்ற 6,000 ஆசிரியர்கள் மாத்திரமே உள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

19,000 முன்பள்ளிகளில் 34,000 ஆசிரியர்கள் முன்பிள்ளை பருவ அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள போதிலும், அவர்கள் முறையான பயிற்சிகள் எதனையும் பெறவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, தற்போது முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திக்காக இயங்கிவரும் அனைத்து முன்பள்ளிகளும் தேசிய கல்விக் கொள்கைக்கு அமைவாக பொதுவான கட்டமைப்பின் கீழ் இணைக்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

## இளைஞனைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

இணுவில் பகுதியைச் சேர்ந்த 29 வயது இளைஞர் ஒருவரைக் காணவில்லை என அவரது உறவினர்களால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 25 ஆம் திகதி வியாழக்கிழமை மதியத்திலிருந்து இளைஞன் காணாமல் போய் உள்ளதாக அவரது உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இளைஞர் காணாமல்போன தினத்தில் மஞ்சள் நிற ரீசேர்ட் மற்றும் கறுப்பு நிற அரைக்காற்சட்டை அணிந்திருந்ததாகவும் மேற்படி இளைஞர் சற்று மனநலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்ததாகவும் இவரைப் பற்றிய தகவல் அறிந்தாலோ அல்லது இவரை எங்காவது கண்டாலோ சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது இளைஞரது உறவினர்களது தொலைபேசி இலக்கங்களான 077 269 0673 அல்லது 077 652 3229 இற்கு அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.(ந-7.60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## முதலிரு மேற்கத்தைய ஆட்சியாளர் காலகட்டம் - பகுதி-III


கலாநிதி க.தவலிங்கம்

ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.


10

### பலனைப் போர்

பெரோ லோபேஸ் த சூசா கொல்லப்பட்ட பின்னர் போர்த்துக்கேயரால் தொன் ஜெரோனி மோத அசவேது என்பவன் கப்பித்தான் ஜெனரலாக நியமிக்கப்பட்டான். தந்துறையில் போர்த்துக்கேயர் தோல்வியடைந்ததும் எதிரில்லே ரால என்பவனின் தலைமையின் கீழ் அவர்களுக்கு எதிராக கரையோரப் பிரதேசத்தில் கிளர்ச்சி ஏற்பட்டது.

இந்தக் கிளர்ச்சிக்கு விமலதர்ம சூரியனின் உதவி கிடைத்தது. போர்த்துகேயர் கிளர்ச்சித் தலைவனைக் கொன்று, கிராமங்களுக்குத் தீ மூட்டிக் கடுமையான அடக்குமுறை மூலம் கிளர்ச்சியாளர்களைத் தோற்கடித்தனர்.

மேலும் அசவேது கண்டி இராச்சியத்துடன் போர் செய்யத் தயாரானான். 1602 ஆம் ஆண்டு கோவாவிலிருந்து மேலதிகப் படையை வரவழைத்த அவன், ஆயிரக்கணக்கானோருடன் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்தான். எனினும் போர்த்துக்கேயரால் மாத்திரமே பலன கணவாய் வரை செல்லக்கூடியதாக இருந்தது. விமலதர்ம சூரியனின் தந்திரத்தால் போர்த்துக்கேயப் படையைச் சூழ்ந்து கொண்ட கண்டி இராச்சியப்படை போர்த்துக்கேயப் படையைக் கடுமையாகத் தாக்கியது. போர்த்துக்கேயருடன் சென்ற கரையோர சுதேசப் படையினரும் விமலதர்ம சூரியனுடைய படையுடன் இணைந்தனர்.

இப்போரில் போர்த்துக்கேயரில் பலர் கொல்லப்பட்டதுடன், அவர்களின் ஆயுதங்களும் கண்டி இராச்சியப்படையால் கைப்பற்றப்பட்டன. இந்தத் தோல்வியின் காரணமாக அசவேது மல்வானை வழியாகக் கொழும்பை அடைந்தான். அசவேதுவின் ஆக்கிரமிப்புத் தோல்வியில் முடிவடைந்த பின்னர் பாரிய படையுடன் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமிப்பதற்குப் பதிலாகப் போர்த்துக்கேயர் இடையிடையே கண்டி இராச்சியத்தின் கிராமங்களைத் தாக்கி நட்டம் ஏற்படுத்தி வந்தனர். அப்போது இருந்த நிலைமையை கேயிரோஸ் குருவானவர் பின்வரும் கருத்துப்பட எடுத்துக்காட்டியிருக்கிறார்.

'எங்கு பார்த்தாலும் கொள்ளைகளும் கொடுமைகளும். பழிக்கு அஞ்சாச் செயல்களுமே தாண்டவமாடின. இப்படியான அக்கிரமங்கள்தான் எதிரிகளுக்கு ரோசத்தைக் கிளப்பி அதிக வலிமையைக் கொடுத்தன. இவ்வாறான கொடிய அக்கிரமங்களைச் சிங்கள மக்களுக்கு இழைத்து அவர்கள் மனதைப் புண்படுத்தியிருக்காவிட்டால் அவர்கள் போர்த்துக்கேயர் மீது இவ்வளவு வெறுப்பும் பகைமையும் கொண்டிருக்க மாட்டார்கள்.

அத்துமீறிப் பலாத்காரமாகக் கற்பழித்தல், மிதமிஞ்சிய தூர்த்தத்தனம் என்பவற்றைப் போர்த்துக்கேய வீரர் செய்து வந்தமையினல் அவர்கள் பெயரைக் கேட்டவுடனேயே சிங்கள மக்கள் அருவருப்பும் துவேஷமும் கொண்டனர். புராதனமும் பெருமையும் படைத்த சிங்களச் சாகியத்தார் இப்படியான ஈவிரக்கமற்றவர்களின் கொடுமைகளுக்கு ஆளாவதிலும் பார்க்கக் கொடும் புலி வாழ் காடுகளிலும் மலைகளிலும் சென்று வசித்துத் தம் வாழ்நாளைக் கழிப்பர்." என்று கூறியிருந்தார்.

அசவிடோவுக்குப் பின் டி மென செஸ் என்பவன் இலங்கையின் கப்ரின் ஜெனரலாக பிரதம சேனாதிபதியாக வந்தான். 1614 ஆம் ஆண்டில் இவனும் பதவியை விட்டு விலக ஹோமெம் என்பவன் பிரதம சேனாதிபதியாகக் கடமையேற்றான். அக்காலத்தில் இலங்கையில் இருந்த போர்த்துக்கேய இராணுவ வீரர் கட்டுக்கடங்காதவர்களாய் வெறிநாய்கள் போலத் திரிந்து ஊரவரை இம்சித்து வந்தனர்.

இதனால் விமலதர்மசூரியனுக்குப் பின்னர் கண்டி இராச்சிய மன்னனாக வந்த செனரத் 1617 ஆம் ஆண்டு போர்த்துக்கேயருடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டான். எனினும் அது சரியாகச் செயற்படவில்லை.

### ரந்தெனிவெலப் போர்

இலங்கையில் போர்த்துக்கேயரின் கப்பித்தான் ஜெனரலாகக் கடமையாற்றிய கொன்ஸ்தாந்தினு தசா என்பவன் ஊவாப் பிரதேசத்தின் ஊடாகக் கண்டியை ஆக்கிரமித்ததால் ரந்தெனிவெலப் போர் ஆரம்பமானது. 1630 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 600 போர்த்துக்கேய வீரர்களுடனும் 4500 சுதேசப்படை வீரர்களுடனும் கொன்ஸ்தாந்தினு த சாவின் தலைமையில் இந்தப் படையெடுப்பு நடைபெற்றது. போர்த்துக்கேயர் பதுளை நகரைக் கைப்பற்றி அதனை நாசமாக்கினர். கண்டி மன்னன் செனரத் தனது படையுடன் பதுளையை அடைந்து போர்த்துக்கேயருக்கு எதிராகத் தாக்குதலை மேற்கொண்டான். செனரத்தின் மகனான ஆஸ்தான இளவரசன் (பின்னர் 2ஆம் இராஜசிங்கன்) கண்டிப் படைக்குத் தலைமை வகித்தான்.

கண்டி இராச்சியப் படை போர்த்துக்கேயப் படையைச் சுற்றிவளைத்த போது போர்த்துக்கேயரின் உதவிக்குச் சென்ற கரையோர முதலிமார் கண்டி மன்னனுடன் சேர்ந்து கொண்டனர். இதனால் பலம் வாய்ந்த கண்டி இராச்சியப் படையால் தாக்கப்பட்டு நிர்க்கதி அடைந்த போர்த்துக்கேயர் வெள்ளவாயாவிற்கு அருகில் ரந்தெனிவெலவுக்குப் பின்வாங்கினர். அங்கு கண்டி இராச்சியப்படையினரின் தாக்குதல்களுக்கு உள்ளாகிய போர்த்துக்கேயரில் 350 பேர் மட்டில் உயிரிழந்தனர். சிலர் கண்டி மக்களால் கைது செய்யப்பட்டனர். கப்பித்தான் ஜெனரல் கொன்ஸ்தாந்தினுவும் இங்கு கொல்லப்பட்டான்.

இந்தப்படையெடுப்பு திடீரெனப் போர்த்துக்கேயரால் மேற்கொள்ளப்பட்டதல்ல. இது இரண்டு வருடங்களாகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பாகும். எனினும் கண்டிப் படையின் தந்திரமான செயற்பாடுகளால் இவை அனைத்தும் தோல்வியில் முடிவுற்றன.

### கன்னொறுவப் போர்

1638 ஆம் ஆண்டு மார்ச் மாதம், அப்போதைய போர்த்துக்கேய கப்பித்தான் ஜெனரலான தியோ கோ மெல்லோ என்பவனால் மீண்டும் கண்டி மீது படையெடுக்கப்பட்டது. போர்த்துக்கேயரைக் கொண்ட படையையும் ஆயிரம் மேலும் ஆயிரக்கணக்கானோரைக் கொண்ட சுதேசப் படையையும் கொண்டு முன்னோக்கிச் சென்ற போர்த்துக்கேயர் சிரமமின்றி கண்டி நகரில் நுழைந்தனர். மன்னன் செனரத்திற்குப் பின் ஆட்சிக்கு வந்த 2ஆம் இராஜசிங்கன் தந்திரமாக இவ்வேளையில் நகரிலிருந்து வெளியேறினான். தக்க தருணத்தில் மன்னனின் தலைமையிலான கண்டி இராச்சியப்படை போர்த்துக்கேயரைச் சுற்றி வளைத்தது.

கன்னொறுவையில் இரு தரப்பினருக்குமிடையே கடும் சமர் நடைபெற்றது. கண்டியரின் வழமையான தாக்குதலால் இம்முறையும் போர்த்துக்கேயப்படை படுதோல்வி அடைந்தது. படையெடுப்புக்குத் தலைமை தாங்கிய தியோகோ த மெல்லோவும் இப்போரில் உயிரிழந்தான். இங்கு எஞ்சியிருந்த போர்த்துக்கேயர் பற்றி பலவிதமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை அனைத்திலும் கூறப்பட்டுள்ளபடி எஞ்சியிருந்தோரின் தொகை நூறுக்கும் குறைவாகும். போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற மேற்கொண்ட இறுதிப் படையெடுப்பு இதுவாகும்.

போர்த்துக்கேயரால் கண்டி இராச்சியத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட அனைத்துப்படையெடுப்புகளும் தோல்வியடைந்தமைக்கும் கண்டி இராச்சியம் தொடர்ந்தும் பாதுகாப்புடன் இருந்தமைக்கும் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் சில கண்டி மக்கள் எப்போதும் அரசனுக்கு ஆதரவு வழங்கியமை, போர்த்துக்கேயருக்காகப் போராடச் சென்ற கரையோர சுதேசப்போர் வீரர்கள் கண்டி இராச்சியத்தை அண்மித்ததும் கண்டி அரசனுடன் இணைந்துகொண்டமை, கண்டி இராச்சியத்தின் இயற்கை அமைப்பும் பௌதீக சூழலும் கண்டி அரசனுக்குச் சாதமாக அமைந்தமை என்பனவாகும்.

### போர்த்துக்கேய பரிபாலனமும் அதன் பலாபலன்களும்

வடக்கே யாழ்ப்பாணம், மன்னார் என்னும் இரு இடங்களிலும் மேற்கே கரையோரப்பகுதிகளிலும் தென்மேற்கில் கொழும்பு,காலி, நீர்கொழும்பு, சப்பிரகமுவ, சீதாவாக்கை, மெனிக்கட வரை போன்ற கோட்டைகள் அடுத்த பகுதிகளிலும் போர்த்துக்கேயர் ஆட்சி வலுப்பெற்று இருந்தது. இலங்கையில் போர்த்துக்கேயரின் ஆட்சியின் கீழிருந்த பிரதேசத்தின் தலைமை ஆட்சியாளராக இருந்தது போர்த்துக்கல் மன்னனாவான். அக்காலத்தில் போர்த்துக்கேயர் வசமாக இலங்கையில் இருந்த பகுதிகள் பரிபாலன வசதியின் பொருட்டுப் பின்வருமாறு பிரிக்கப்பட்டிருந்தன.

1.மாத்தறை திசாவனி:- கொழும்புக்குத் தெற்கிலிருந்து கிருவப்பற்று மேற்கு வரையுள்ள கரையோரப் பகுதியை இது கொண்டது.

2.நாலுகோறளைத் திசாவனி:- இப்போது கேகாலைப் பகுதி இருக்கும் இடத்தை இது கொண்டது.

3. சப்தகோரளைத் திசாவனி: இப்போது வடமேல் மாகாணமாயுள்ள பகுதி இதில் அடங்கியுள்ளது.

4.சப்பிரகமுவத் திசாவனி: இப்போது இரத்தினபுரிப் பகுதியாயிருப்பது இத்திசாவனியில் அடங்கியது.

5. யாழ்ப்பாணமும் மன்னாரும்.

மேலே கூறப்பட்ட திசாவனிகள் போர்த்துக்கேய அதிகாரிகளின் பரிபாலனத்தின் கீழ் விடப்பட்டன. சிங்களப் பகுதிகள் பிற்காலத்தில் மாகாணங்களாகப் பிரிக்கப்பட்ட போதும் மாகாணங்களுக்கும் திசாவனி என்றே பெயரிட்டார்கள். தற்போது "அரசாங்க அதிபர்" எனப்படுபவரை இப்போதும் சிங்கள நாட்டு ப்புறமக்கள் "திசாவனிஹா முத்துருவ" என்று அழைப்பது நோக்கத்தக்கது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரசுக்...

தெரிவித்தார்.

மேற்படிக் கூட்டத்தில் சிறீதரன் மற்றும் மாவை சேனாதிராஜா ஆகியோருடன் சுமந்திரன் எம்.பியும் கலந்து கொண்டிருந்தார்.

எனினும் இந்த விவகாரத்தில் இணக்கப்பாடு எதுவும் எட்டப்படாத நிலையில் கூட்டத்தை முடித்துக் கொண்டு சுமந்திரன் வெளியேறினார் என்று தெரிய வருகிறது.

கட்சியின் தலைமைப் பொறுப்பை தாம் இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும், கட்சித்தலைவராக மாவை சேனாதிராஜாவே தொடர்கின்றார் என்றும் சிறீதரன் தெரிவித்தார்.

கட்சிக்குள் கொதிநிலை நிலவுகிறது. முடிவுவெடுக்க முடியாத நிலைமை உள்ளது. எல்லோரையும் சமாளித்து, அரவணைத்து, ஓர் இணக்கமான முடிவை காணவேண்டி இருப்பதால் சம்பந்தப்பட்ட தரப்புகளோடு நான் நேரடியாகப் பேச விருக்கிறேன். அதற்காக இந்த விடயத்தில் முடிவெடுப்பதைச் சற்றுத் தள்ளிப்போடத் தீர்மானித்துள்ளோம்.

செயலாளர் பதவி விடயத்தில்தான் இழுபறி நீடிக்கின்றது. அதுவும் திருகோணமலை - மட்டக்களப்புத் தரப்புகளுக்கு இடையில் இழுபறி நிலை உள்ளது. இருதரப்புகளும் விட்டுக் கொடுத்து, செயலாளர் பதவியை கால அளவீட்டில் பங்கிட்டு, ஏதேனும் இணக்கத்திற்கு வரமுடியுமா? என்று ஆராய்கின்றோம்.

இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எங்களுக்குச் சற்று கால அவகாசம்தேவைப் படுகிறது. மாவை சேனாதிராஜா அடுத்து வரும் நாட்களில் சிங்கப்பூர் செல்கின்றார். அவர் பெப்ரவரி 10ஆம் திகதிக்குப் பின்னர் நாடு திரும்புவார். அதன் பின்னர் இப்பிரச்சினை பற்றி ஆராய்ந்து ஒரு முடிவெடுப்போம். அதுவரை தற்போது உள்ள நிலைமை அப்படியே தொடரும்" என்றார் சிறீதரன் எம்.பி. (ந-7)

## நாட்டின்...

பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இணைய ஊடகமொன்றில் இடம்பெற்ற கலந்துரையாடலில்பங்குகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் ஒக்ரோபர் மாதம் 17ம் திகதிக்கு முன்னதாக நடத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கு எவருக்கும் உரிமையில்லை.

எமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. இது உறுதி செய்யப்பட்ட விடயம்.

அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் உடனடியாக பாராளுமன்றம் கலைக்கப்படும் என்றும் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். (ந-7)

## இலங்கை...

துள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் தலையீடுகள் காரணமாக கடந்த வருடம் நவம்பர் மாதம் இலங்கை கிரிக்கெட் அணிக்கு சர்வதேசத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே அத்தடை நீக்கப்படும் எனவும் அது தொடர்பில் விரைவில் வர்த்தமானி அறிவித்தல் வெளிவரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## கடற்கொள்ளை...

பஹ்ரைனில் உள்ள 39 நாடுகளின் கூட்டுக் கடற்படையிடம் கோரப்பட்டுள்ளதாகக் கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

சோமாலிய கடற்கொள்ளையர்களால் 6 மீனவர்களுடன் இலங்கையின் மீன்பிடிப் படகொன்று கடத்தப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாக அறிவித்திருந்தது.

அதற்மைய, இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடந்த 12ஆம் திகதி புறப்பட்டுச் சென்றிருந்த 'லொரென்சோ புதா 4' என்ற பல நாள் மீன்பிடிப் படகொன்றே இவ்வாறு 6 மீனவர்களுடன் கடத்தப்பட்டுள்ளது. (ந-7)

(முன்னர் வந்த செய்தி)

## நீதிமன்றப்...

பாராளுமன்றத்தில் கடந்த வாரம் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் குறித்து தெரிவிக்கப்படும் விமர்சனங்கள் தொடர்பில் குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் காரணமாக டிஜிட்டல் பொருளாதாரத்துக்குப் பாதிப்பு ஏற்படும் என சிலர் தெரிவித்து வருகின்றனர்.

உலகில் 137 நாடுகளில் இந்த சட்டம் செயற்பட்டு வருகிறது. அப்படியாயின், அந்த நாடுகளில் டிஜிட்டல் பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு எதுவும் இல்லை. அதனால் இதனை அரசியலாக்க வேண்டாம். ஒட்டுமொத்த இலங்கை நாகரிகத்தை பாதுகாப்பதாக இருந்தால் இந்த விடயங்கள் செயற்படுத்தப்பட வேண்டும்.

அத்துடன், 137 நாடுகளில் சமூக வலைத்தளங்கள் தொடர்பில் இருக்கும் சட்ட திட்டங்களை விட மிகவும்இலகுவானது.

மேலும், இந்த சட்டமூலத்துக்கு உயர்நீதிமன்றம் வழங்கியிருக்கும் திருத்தங்களை நிச்சயம் உள்வாங்குவோம்.

அதேநேரம் உயர்நீதிமன்றம் சில பிரிவுகளில் மாற்றங்களை மேற்கொள்ளுமாறு தெரிவித்த விடயங்களுக்கு மாற்றாக எதுவும் இடம்பெறுபோவதில்லை.

அத்துடன், இந்த சட்டத்தை செயற்படுத்த ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படும். உலக நாடுகளிலும் இதற்காக ஆணைக்குழு அமைக்கப்பட்டிருக்கிறது. தற்போது இலங்கையில் கொண்டுவந்திருக்கும் இந்தச் சட்டம், சிங்கப்பூரில் இருப்பதை விட கடுமையானது அல்ல. சிங்கப்பூரில் சில விடயங்களுக்கு ஒரு மில்லியன் டொலர் வரை தண்டப் பணம்விதிக்க முடியும். அந்தளவு கடுமையான சட்டமல்ல இது.

மாறாக, அவற்றை விட இலகுவான,

ஜனநாயக ரீதியான, பிரித்தானிய அரசியலமைப்புக்கு அமைய, இந்தியாவின் அரசியலமைப்புக்கு அமைய ஆசிய நாடுகளின் அரசியலமைப்புகளுக்கு அமைவாக, மிகவும் தளர்வான அளவே இந்த சட்டமூலத்தின் ஊடாகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்றார். (ந-7)

## வாகன விபத்து; ஒருவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா ஏ9 வீதி வலயக்கல்வி பணிமனைக்கு முன்பாக நேற்றுக் காலை இடம்பெற்ற பேருந்து - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி பயணித்த அதிசொகுசு பேருந்து மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டதி லேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ந-7)


லக்கி 7 VIP
திகதி 2024.01.28
சீட்டிழுப்பு இலக்கம் 0199
F 2 1 8 9 4 7 F
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2024.01.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1403
V 10 20 27 69 V
Double Chance 53279

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3615
சீட்டிழுப்பு திகதி 28.01.2024
Z 37 41 58 69
Z 33249
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.28
சீட்டிழுப்பு இலக்கம் 0682
கடகம் 07 27 31 33 கடகம்
07075 25

மஹஜன சம்பத
திகதி 2024/01/28
சீட்டிழுப்பு இலக்கம் 5373
A 2 1 6 4 0 1
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 28/01/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1721
Y 09 03 23 33 74
47809

உத்தியோகபூர்வ முடிவுகள்
அத ஜய சம்பத
28.01.2024 வெற்றி வாரம் 081
X 0 2 2 2 8 4
95894
அடுத்த சுப்பர் ஜெக்பொட் ரூ. 27,437,195.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2347 வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.28 தினம் ஞாயிற்றுக்கிழமை
05 12 13 53 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,531,904/-
80509

சனிதா
திகதி 2024.01.28 வெற்றி வாரம் 4508
11 42 47 74 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,500,818.40
42629

சசிரி
434
2024.01.28
20 36 39
கபிலம்
06
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,429,000/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4059 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.01.28 தினம் ஞாயிற்றுக்கிழமை
01 14 52 59 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,929,694.40
698252

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 01 22 37 61 73
1523
28.01.2024
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 498,763,106.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2173
சீட்டிழுப்பு திகதி: 2024.01.28
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,026,121.60
08 13 21 64 P
715736


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

விரைவு பொதிகள் சேவை

DHL

வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.

Lanka Cargo Worldwide Express

பணியாளர் தேவை

இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

077 038 5584

(18785)


## சர்வதேச...

டிரான் அலஸ் கூறியுள்ளார்.

நீர்கொழும்பு பிரதேச சமூக பொலிஸ் குழு உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தும் நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் இக் கருத்தை வெளியிட்டார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர்,

"சீருடையுடன் இருக்கும் போது யாரேனும் தாக்கினால் திருப்பி அடிக்க வேண்டும், இல்லையேல் சீருடை அணிவதில் பயனில்லை, கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டும், ஜனாதிபதி எனக்கு பலத்தை வழங்கியதால் தான் நான் இதனைக் கூறுகின்றேன்.

யுக்தியை தொடக்கி, நாட்டை சுத்தம் செய்ய நினைத்தேன். சில இணைய ஊடகங்கள் போதைப்பொருள் மோசடியாளர்களின் பணத்தில் வாழ்கின்றன. அவர்களை பயன்படுத்தி எம்மை விமர்சிக்கின்றனர். யுக்திய நடவடிக்கையை நிறுத்துங்கள் என்று ஐக்கிய நாடுகள் சபையும் கூறியது. எங்கள் நாட்டில், நாங்கள் விரும்பியபடி செயல்படுகிறோம், சர்வதேசத்தின் விருப்பப்படி நான் செயல்படவில்லை."

"பாதாள உலகக் குழு வழக்குகளில் வாதாடும் சட்டத்தரணிகளும் இருக்கிறார்கள். பாதாள உலகக் குழுவினர் மில்லியன் கணக்கில் பணம் ஈட்டுகின்றனர். பாதாள உலகக் குழுக்களும், போதைப்பொருள் வியாபாரிகளையும் வைத்திருக்க முடியாது. அவர்கள் இந்த நாட்டிற்கு ஒரு சுமை" என்றார். (ந-7)

## கிணற்றிலிருந்து...

அவதானித்த பொதுமக்கள் நெல்லியடிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

குறித்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தினை மீட்டுள்ளனர்.

இதில் உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த சிவஞானம் கனகமணி (வயது 71) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார்.

பிரேதப் பரிசோதனைக்காக சடலம் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந-7,60)


உடனடி வேலைவாய்ப்பு

நீர்வேலியில் புதிதாக திறக்கப்பட்ட காரசாரம் உணவகத்துக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை

- கொத்து ரொட்டி, பிரைட் றைஸ் போடக்கூடிய சமையல் ஆள்
- காசாளர்
- உணவு பரிமாறுபவர்

075 944 5160 | 077 726 8195

(18812)

வீடு வாடகைக்கு உண்டு

நவாலியில் பிரதான வீதிக்கு அருகில் குடியிருக்க, படிக்கும் மாணவர்களுக்கு ஏற்ற அமைதியான சூழலில் உண்டு.

077 644 6514

(C-8230)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18802)

076 825 7716 (ஆகாஸ்)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
DBF & HDBF (10.02.2024)
(IBSL நிறுவனத்தின் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானம்)

கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business level - I,II (10.02.2024)

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat [Sri Lanka]
(AA1 - 10.02.2024)
G.C.E.O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்,
(AA2, AA3 -24.02.2024]
G.C.E. A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.

Certificate Course in English

Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.

0212223382 | 0212229149
0774405917

(C-8219)

V2 VISA SERVICES

கனடா Visit Visas

077 77 20 322
077 77 19 322

Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-8234)

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடியில் 10 பரப்பு காணி A9 வீதி முகப்புடன் விற்பனைக்கு உண்டு.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

வட மாகாண சபை 300 மீற்றர்

கைதடி 4 சந்தி 200 மீற்றர் தூரம்

076 788 0591 | 077 129 4999

(18810)

Visa

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

Visitor Visa

வெளிநாடுகளில் உறவினர் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

Minor education - Canada (7 - 17 Years)

Visa Consultant

134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.

070 375 0002

(18785)


# மரண அறிவித்தல்



எம்முடன் 06 - 02 - 1958

இறையுடன் 27 - 01 - 2024

## திருமதி அன்னலக்ஸ்மி மகேந்திரா

யாழ்ப்பாணம் உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னலக்ஸ்மி மகேந்திரா அவர்கள் நேற்று முன்தினம் (27.01.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - வாலாம்பிகை தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கனகராசா - அம்பிகை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற கலாபூஷணம் கனக மகேந்திரா (ஓய்வு நிலை அதிபர், அகில இலங்கை சமாதான நீதவான் ) அவர்களின் மனைவியும், திருமதி உ.ஹம்சானந்தி (ஆசிரியை தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி) திருமதி மெ. நிதர்சனா (வளவாளர், வலயக்கல்வி அலுவலகம், திருகோணமலை) திரு. ம.மயூரதன் (நிறைவேற்று உத்தியோகத்தர் டோக்கியோ சீமேந்து கம்பனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் திரு. க. உமாசுதன்( மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்- மட்டக்களப்பு) திரு. கி.மெக்கீவன் (தீயணைப்புப் படைப்பிரிவு திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் செல்வி உ. ஆருக்ஷணா ( தி/ ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி) செல்வன் உ. ஆதீஸ்வர் (தி/ இ.கி.ச கோணேஸ்வரா இந்துக்கல்லூரி) ஆகியோரின் ஆசை அம்மம்மாவும், காலஞ்சென்ற அன்னபூரணம், திரு. வரதராசா, காலஞ்சென்ற அருளாம்பிகை, திரு. நவராசா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக நேற்று (28.01.2024) ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை வில்லூன்றி கந்தசாமி கோவில் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் இன்று (29.01.2024) திங்கட்கிழமை அதிகாலை 5.00 மணி அளவில் இடம்பெற்று பி.ப 12.00 மணி அளவில் யாழ்ப்பாணம் உரும்பிராயில் உள்ள அவரது இல்லத்தில் மீண்டும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 5.00 மணி அளவில் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

(18811)

8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி | 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் லோகநாதன் சதீஸ் (கனடா)
தோற்றம் : 04.08.1981 மறைவு : 27.12.2016

அமரர் லோகநாதன் சபேஸ் (பிரான்ஸ்)
தோற்றம் : 07.10.1984 மறைவு : 30.12.2023

கனம் வழங்க முனையப் பெற்றதும்
வமைதின் பல்வகைமையை ஒத்ததாய்
இயல்பும் பலதாய் ஒருங்கமைத்தாய்
சிந்தனையில் திகழ்வுகளாக திகழும்
எக்கணமும் மெய்யானதாக மறையாது
தரிக்கத்தான் எண்ணமும் தேடுதே....

அமரர் லோகநாதன் சபேஸ் அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் பிரான்சில் நடைபெறும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

இங்ஙனம்
குடும்பத்தினர்
லோகநாதன் (ராசு)

(18809)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 101, ... எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org